[illegible]

Vl. No. 6. 9 Feb 1928.

TL
[illegible], N28KN
N28.1.6.
188989

665

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரு. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

8 MAY 1928 MADRAS

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரு. 7 8 0
புற நாடு ... ... ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ஞ பிப்ரவரிமீ 9௳ [No. 6.

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	செய்யும் கருமமும் செயல் வகையும்.	101
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A. B. L.	103
3.	தமிழ்ப்பாடம்.	105
4.	காந்திமதி (A novel) T. N. சேஷாசலம் B. A. B. L.	109
5.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A. B. L.	111
6.	நாலடி நானூற்றின் திறம் T. A. கனகசபாபதி முதலியார்	114
7.	வர்த்தமானம்	117

கலா நிலயம்.

138989

செய்யும் கருமமும் செயல் வகையும்.

V

செய்கையால் செய்வதற்குத் தர்மம் என்றும், மனதால் உணர்வதற்கு அழகென்றும், புத்தியால் அறிவதற்குச் சத்தியம் என்றும் அமைந்த மூன்று பிரிவுகளும் அந்தத்தில் ஒரே தத்துவம் ஆகின்றதென்று முன்னர்க் கூறினோம். ஒன்றினைச் செய்வதினும் ஒன்றினை அறிவதினும், ஒன்றினை உணர்வது மாந்தருக்கு இயற்கையில் எளியது ஆவதும் அனுபவத்திற்குள் அடங்கியதாகும். தரும வாழ்க்கை என்பது நன்னெறி கடவாச் செய்கை; சத்தியம் என்பது வெளித்தோற்ற வேற்றுமை யாவும் பொய்யென அறிந்து, அணுமுதல் அண்டங்களீறான அனைத்தையும் அதனுள சராசர பேதமான யாவற்றையும் தன்னோடு கலந்து ஒன்றேயெனப் பாவிப்பதற்காதாரமாகிய ஒருநிலை. கற்ற தர்மத்தை நாம் கையாண்டால் பின் பாவமேது, துன்பமேது! அவ்வப்போது நமக்குத் தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை எல்லாம் நாம் செய்கையாய் மாற்றிவிடுவோமாயின் நரகத்தை நோக்கிப் பின் நாம் வழிநடக்க மாட்டோம். 'நரகத்திற்குப் போகும் வழியெல்லாம் நல்ல எண்ணங்களே பரப்பப் பெற்றிருக்கின்றன'. (The road to hell is paved with good intentions) என்னும் ஆங்கிலப் பழமொழியின் கருத்தும் இதுவே. ஆயின் நல்ல எண்ணங்கள் செய்கையாய் மாறுவதற்குமுன் நசித்துப் போவது ஏனெனில், ஒரு சரியான காரணமிருக்கின்றது.

நல்லதென்பது ஒருநாளும் நசித்திடாது. இது நிரந்தரமானதோர் வாய்மை. எனவே, நாம் நல்லதென நினைக்கின்ற நினைவுகள் நசித்தவெனில், உண்மையில் அவை நல்லனவன்றே என்று மதித்தல் வேண்டும். இவ்வுலகவாழ்க்கையில் சாதாரணமாய் எவ்வகை எண்ணங்களை நாம் நல்ல எண்ணங்கள் என்று நினைத்து விவகரிக்கின்றோம்! சற்று யோசித்துப் பார்த்திருக்கின்றீர்களா! பொய் சொல்லப்படாது, திருடப்படாது, கட்குடிக்கப்படாது, சூதாடப்படாது, வேசியர்வழி செல்லப்படாது, கோபம் பொறாமை முதலிய கொள்ளப்படாது, காலத்தை வீணாகப் போக்கப்படாது, வீண் செலவு செய்யப்படாது என்ற இவைகளும், இவைபோன்ற விலக்குக்களும் ஒருபுறம். லோபமின்றி யாவர்க்கும் எதனையும் அளிக்கவேண்டும், கோயிலுக்கு நாடோறும் செல்லவேண்டும், கடவுளுக்குப் பூசைகள் புரியவேண்டும், நூற்கள் பல முயன்று கற்கவேண்டும் என்ற, இவைகளும் இவைபோன்ற பிற விதிகளும் மறுபுறம். முன்னதைப் பாவமென்றும் பின்னதைப் புண்ணியம் என்றும் அழைப்பர். இவ்விதி விலக்காகிய இரண்டு எண்ணங்களும் பெரும்பான்மை எதன் காரணமாய்ப் பிறக்கின்றது? சற்று ஆழ்ந்து ஆராய்ந்தால், பயம் ஒருபுறமும் ஆசை மறுபுறமும் அவைகளுக்குப் பிறப்பிடமாய் அமைவதை அறியலாம். பாவம் புண்ணியம் என்னும் இருகூறு எதனினும் இல்லை. நினைவு மாத்திரத்தில் சில பாவங்களாயும் சில புண்ணியங்களாயும் தோன்றுகின்றன. பாவத்திற்கு அஞ்சலாம், புண்ணியத்தை விரும்பலாம். ஆனால், நாம் பாவச்

செயல்கள் செய்யப்படாதென்னும் நல்ல எண்ணம் நினைக்கின்றபோதும், புண்ணியங்கள் புரியவேண்டும் என்னும் நல்ல எண்ணங்கள் நினைக்கும்போதும் பாவத்தைப் பாவத்திற்காகவே பயந்தேனும் புண்ணியத்தைப் புண்ணியத்திற்காகவே விரும்பியேனும் பொதுவாக அவ்வெண்ணங்கள் கொள்வதில்லையே. பயப்படுவதும் நமக்காகவே, நம்மைக் கருதியே. விரும்புவதும் நமக்காகவே, நம்மைக் கருதியே. பாவத்தினால் விளைகின்ற துன்பங்கள், இம்மையில்சட்டத்தின் தண்டனையென்றும்சரீரநோயென்றும் ஊரார் இகழ்ச்சியென்றும், மறுமையில் நரகவாதனை யென்றும் இழிபிறவி யென்றும் தோன்றுமே என்னும் பயம் தோன்றுகின்றபோதெல்லாம் உடன் தோன்றி அவைகளை விலக்க நினைக்கின்ற எண்ணங்களைத்தாம் நாம் நல்ல எண்ணங்கள் என்று கொண்டாடி வருகின்றோம். அவ்வாறே, இவ்வுலகிற் செல்வமும் புகழும் தேகசவுக்கியமும், மறுமையில் சுவர்க்கமும் நற்பிறவியும் பெறுவதற்கு ஆசை பிறக்கும்போது உடன்பிறக்கும் கோயில் நினைவையும் ஈகை எண்ணமும் கல்வியின் ஊக்கமும் நல்லனவென்று பாராட்டுகின்றவர்களுமாவோம். ஆதலால், அவனவன் தன்னையே நடுவாக வைத்து இப்பாவபுண்ணிய எண்ணங்களைச் சுழற்றி விடுகின்றான். பயம் ஆசை இரண்டும் தன்நயம் கருதிப் புகுமாயின் நல்லனவாகுமோ! அவை யிரண்டும் தீயவே. தீமை எந்நாளும் நன்மைக்கு வித்தாகாதென்பது பிரசித்தம். எனின், நல்லன என்று நாம் ஓராமல் மதிக்கின்ற எண்ணங்கள் வாய்மையே நோக்கின் நல்லன அல்லவே அல்ல, கண்டீர். ஆதலினாற்றான் அவை அவ்வளவு எளிதில் நாசமடைகின்றன. பழைய செய்கையே பழகி வருகின்றவர்களாய் எஞ்சுகின்றோம்.

பயமும் ஆசையுமே கெட்டவை என்றபின், சுயநயத்தின் மூலமாக விளைகின்றபோது அவை பின்னும் கெட்டவையென்று காட்டவும் வேண்டா. சாதாரணமாக சுயநயம் (Selfishness) என்றால் பிறரைக் கெடுத்துத் தானொன்று அடைவதற்கு நினைப்பதே சுயநய எண்ணம் என்று நினைத்து வருகின்றனர். அது சரியன்று. மற்றவரைப்பற்றி நினைத்தாலும் நினைக்காமற் போனாலும் தன்னைப் பிரபஞ்சத்திலிருந்து வேறாகப் பிரித்து நினைப்பதெல்லாம் செய்வதெல்லாம் சுயநய சிந்தனையென்றும் செய்கையென்றும் கொள்வதே தகும். இனிச் சுயநயம் என்பது தன்னையே தனியாகக் கருதியதாகத்தான் இருக்கவேண்டும் என்பதுமில்லை. தன்னைச் சேர்ந்தவர்கள் சிலர் என்று, குடும்பத்தைக்கருதியோ, சாதியைக்கருதியோ, தொழிலைக்கருதியோ தேசத்தைக்கருதியோ இன்ன பலவகைகளில் அவர்களை மற்றவர்களிலிருந்து வேறாகப் பிரித்துக்கொண்டு தன்னோடு அவர்களுக்குப் பொதுவாக ஒரு நன்மையை நாடுவதுங்கூட சுயநயமே. எவ்விதச் சுயநயமும் தீதாதலால்,' இவ்வகையிலும் பயில்கின்ற நோக்கங்களும் செயல்களும் நல்லவெனக் காணினும் உலகினில் இன்றைக்கு முயற்சியளவுபயன்படாது அவைபோவதும் விந்தையன்று.

தனக்கொரு இலாபம் கிடைக்கவேண்டும் எனும் கருத்தினால் தீமையை ஒழித்து நன்மையை நாடுகின்றவன் நாடிய அளவு அந்நன்மையைக் கையாளாது விடுவது முற்றிலும் இயற்கையே. வியாபாரத்தில் சிலர் பொய்சொல்லிச் சீக்கிரத்தில் பொருள் சம்பாதிக்கப் பார்க்கின்றனர். சிலர் யோக்கியமான வியாபாரமே நீடித்திருக்குமென்று அநுபவத்தாலறிந்து மெய்யாகப் பிழைக்கின்றார். முன்னவன் பொய் சொல்வதற்கும் பின்னவன் மெய் சொல்வதற்கும் முடிவில் வித்தியாசம் இல்லை. இருவருக்கும் நோக்கம் பொருள் செய்யவேண்டும் என்பது ஒன்றே. அப்பொருள் செய்வதற்குப் பொய்வழி தகுந்த வழியென்று ஒருவன் எண்ணினான். இலாபம் அவ்வப்போது சிறியதானாலும் நீடித்து வருகின்ற தன்மையால் மெய்யே சிறந்தவழி என்று மற்றவன் மதித்தான். "சத்தியத்திற் சிறந்ததோர் சாதனம் இல்லை," (Honesty is the best Policy) என்னும் ஆங்கிலப் பொருளுரை என்ன சொல்கின்றது. மெய்ந்நிலையை எய்துவதைவிடச் சிறந்த நோக்கம் வேறொன்றில்லை என்று கூறிற்றில்லை. வேறொன்று எய்துவதற்குப் பல உபாயங்களிருப்பினும் சத்தியமே நாளடைவில் மிகவும் உபயோகமான உபாயம் என்றே இது போதிக்கின்றது. ஆதலால் மெய்யுரையும் கோயில்பூசையும் இவைபோன்ற நல்லனவென்று நாம் கருதும் விஷயங்கள் ஒரு உபாயம் அல்லது சூழ்ச்சிகளாகவே வாழ்க்கையில் அமையுமாயின், மனதினின்று அவை வெகு எளிதில் வழுவிவிடாமல் என்ன செய்யும்! அரச தண்டனைக்குப் பயந்து சத்தியமாய் நடப்பவன், இந்தச் சத்தியத்தினால் பெரும் இலாபம் ஒன்று தனக்கு வாராமற் போய்விடுகின்றதென்று தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில், "இந்தத் தடவை மாத்திரம் சிறிது சத்தியத்தைவிட்டு வேறு உபாயத்தால் இலாபம் அடைந்து விடுவோம். சத்தியமென்னும் சிறிய புத்தியால் சமயத்தைக் கைநழுவ விடலாகாது. இதற்குத் தண்டனை கிடைத்தே தீரும் என்பது என்ன நிச்சயம்! சட்டத்திற்கு அகப்படாமல் தப்பியும் விடலாம். எத்தனை பேர் கொலை செய்தவர்களில் தப்பினவர்களில்லை," என்று இந்தப் பிரகாரம் ஒருவனது யோசனை பாயத் தலைப்படுகின்றது. தெய்வத்திற்குப் பயந்து பாபபுண்ணியங்களை நினைப்பவனும் அவ்வாறே, "எத்தனையோ பேர் எவ்வளவு எவ்வளவோ அக்கிரமங்கள் செய்து வருகின்றனர், அவனைப்பார்த்த கண்ணுக்கு நான் செய்யும் இச்சிறு பாவம் எந்தமூலை. இதற்கு முன் எத்தனையோ புண்ணியங்கள் செய்திருக்கின்றேனே, அவைதாம் இந்த ஒரு பாவத்திற்கு ஈடு கொடுக்காவோ. பார்க்கப்போனால் நரகத்தையும் மோக்ஷத்தையும் நேராகக் கண்டவர் யார். கடவுளும் எல்லாம் கட்டுக்கதையாயிருந்தாலு மிருக்கலாமே! ஆதலால் நான் இப்பொழுது அடைய விரும்புகிற இலாபத்திற்குத் தகுந்த உபாயம் இதுவே யாகும்," என்ற பான்மையில் அவனது மனம் போகின்றது.

எனவே, இலாபத்தை முன்னிட்டு எண்ணுகின்ற எண்ணங்களெல்லாம், அவ்வெண்ணங்கள் வரையில் மேன்மையுடையனவாய்க் காணினும், முடிவில் குறித்தபயனைப் பெறுவதற்கு ஏற்றதெனஅமைகின்ற தந்திரங்களே ஆகும். சத்தியத்தாலும் தர்மங்களாலும் எய்துவது சுகம் என்ற பயன் நினைவினில் இருக்கும் வரை அவைகளை இடையாறாது கையாள்வது இயல்வதொன்றன்று பயனொன்று தனக்கு எதிர்பார்க்கின்ற மனப்பழக்க முடையவன் சிற்சில சமயங்களில் மெய்ந்நெறியும் தரும ஒழுக்கமும் அல்லாத பிற வழிகளாலும் விரைவின் எய்தலாகும் எனும் வஞ்சனைக்கு ஆளாவது இயல்பே. அல்லாமல், மெய்யும் தருமமும் எந்நாளும் கடைபிடிப்பதற்குத் துன்பமானவை. தீமையே பூண்ட சிலர் செல்வராய்ச் சுகம் பெற்றிருப்பதுபோல் தோன்றிவர அவர்களை, வாய்மையால் ஏழ்மையே கொண்டவொருவன் கண்டு, 'மெய்யருக்குக் காலம் இக்கலிகால மல்ல வென'த் தன்னிலே தளர்ந்து தடுமாற்றம் எய்துவதும் கூடும். ஆதலால், வஞ்சனை தளர்ச்சி எனும் இவ்விரு இடையூறுகளும் புகுந்து நன்னினைவை நாசம் செய்வதெல்லாம் பயனோடு தொடர்ந்து நடந்ததால் நேர்வதே என்பதற்கு ஐயமில்லை.

இவ்வாறு வெளிப்படை யாகவேனும் குறிப்பாகவேனும் இப்பிறவியிலேனும் மறுபிறவியிலேனும் தனது செய்கைஎதற்கும் பயன் என்ற ஒன்று எய்தவேண்டும் என்று எதிர்பாராமல் கருமத்தை ஆற்றவல்லவர் மாட்டே எண்ணிய நல் எண்ணங்கள் யாவும் ஏற்ற நற்செயல்களாகவும் திரிவது காண்போம். எண்ணங்கள் பிறக்கின்ற நம்மனதோ பயனையே பெரிதும் பாராட்டுகின்ற தன்மையை இக்காலத்தில் பெற்றிருக்கின்றது. எதைப்பார்த்தாலும் எதைச் செய்வதானாலும் இதனால் நமக்கு என்ன பயன் என்னுமொரு கேள்வியே யாவற்றிற்கும் முன்புகுந்து நிற்கின்றதே. இது மனதிற்கே இயற்கையாய் அமைந்த தன்மையோ, அல்லது லோகாயதக் களஞ்சியமான இக்காலத்தில் செயற்கையாயிற்றோ, யாவதாயினும் ஆகுக. நம் மனது மாத்திரம் பயன் எதிர்பாராமல் விவகரிக்கச் சிறிது சிறிதாகப் பழகி வருமாயின் நெடுந்தூரம் ஒன்றும் நோக்காமல் வாய்மையை வாய்மைக்காகவேயும் தருமத்தைத் தருமத்திற்காகவேயும் பாராட்டும் பெருந்தன்மை நிலைக்கின்ற அத்நிப்பிய நிலையை எய்தக்கூடும். நினைத்த நற்செய்கையும் அறிந்த நல்வாய்மையும் நல்லவேயாய் நிலைத்திருக்க வேண்டுமாயின் இலாபநஷ்டமெனும் இச்சிறு மானிடர் சிந்திகின்ற அற்ப அளவுகோல் மனதைவிட்டு நீங்குவதற்கு எதுவொன்று பயிற்சிதருமோ அதனில் மனம் பயின்றுவருவது இன்றியமையாத தாகின்றது. அப்பயிற்சியை அளிக்கும் வன்மை அழகிற்கின்றி இவ்வையகத்தில் பிறிதொன்றற்கில்லை.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L. (முன் தொடர்ச்சி—பக்கம் 92)

புனைந்துரையும் பொய்யுரையும்:- உள்ளதற்கும் இல்லதற்கும் வேற்றுமை தெரியாத இடம் என்றோமேயன்றி இல்லாதவைகளையே இருப்பதாகக் கூறுவதுஎனயாம் கூற வரவில்லை. "பொய்யிருப்பது புலவர் வாயிலே" என்பது கொண்டு, பொய்யெல்லாம் பொருள் நிறைந்த பாடல்கள் எனலாகாது. பொய்யுரைக்கும் (கற்பிதம்-Imagination) புனைந்துரைக்கும் (கற்பனை-Fancy.) வேற்றுமை அறியாதவர்களே புலவர்கள் எல்லாம் பொய்யர்கள் என வாய்கூசாது கூறுவார். பொய்யுரையானது மெய் பொய் என்ற வேற்றுமை அறிந்த இடத்தில் பிறப்பது புனைந்துரையானது அவ்வேற்றுமையே பிறவாத இடத்திற் பிறப்பது. மாட்டின் உடலில் குதிரையின் தலையைக் கொண்டுவந்து பொருத்துவதை எந்த இடத்தில் காணலாம்? உள்ளுணர்வு உள்ள இடத்தில் அல்ல. ஒருவன் உலகிற்கண்டதைக் கூறுதுதன்னறிவால் ஆராய்ச்சி செய்து 'இவ்வாறு இருந்தால் ஏற்புடைத்தாகும்' என எண்ணித் தான்கொண்ட அம்மாட்டின் உள்ளுணர்வையும் இக்குதிரையின் உள்ளுணர்வையும் ஒன்றாகப் பற்றவைக்கின்றான். பாடுபட்டுத் தேடிப் பல நாள் சேர்த்துப் பொன்போலப் புதைத்துவைத்த உள்ளுணர்வு எனும் ஒப்புயர்வில்லாத ஒண்பொருள்களை, அறிவாழத்தால் வேண்டியபடி மாற்றிவைத்துச் சூதாடுவதே பொய்யுரை (கற்பிதம்)ஆகும். உள்ளுணர்வுகளைத் தேடி ஒன்றாகத்திரட்டி உருக்கிவார்த்து அழகிய பதுமைகளாக அமைத்துவைப்பதே புனைந்துரை (கற்பனை) ஆகும். ஆனால் புனைந்துரையில் புகழ்பெற்ற புலவர்களும் ஓர் உள்ளுணர்வோடு மற்றோர் உள்ளுணர்வினை ஒன்றுசேர்க்க நாம் காணவில்லையா? முன்சென்ற புலவர்பெருமக்கள் பாடியவற்றில் பலவற்றைக்கொண்டு தெய்வப்புலவர்கள் எனச்சிறந்து திகழ்ந்தோர், பழையதோர் கதையினையே புதிதாக எழுதவரவில்லையா? கம்பன் அஃதில் ஒவ்வோர் அகப்பை முகந்துகொண்டான் என்று எல்லோரும் இயம்பவில்லையா? இவை எல்லாம் உண்மைதான். ஆனால் முன்சென்றவர்கள் சொல்லியவற்றையே ஒன்றின்பின்னொன்றாகப் பொறுக்கிவைப்பது புலமையாகாது. அவ்வாறு அப்பெரும் புலவர்களும் செய்யவில்லை. கள்வரது தொழிலேயன்றிக் கவிகளது தொழில் அதுவல்ல. பழைய புலவர்கள் பாடியவற்றை எல்லாம் உருக்கிவார்த்து வேறொரு பொற்பதுமையை உலகிற்கு உதவுகின்றவர்களே தெய்வப்புலவர்கள். தெய்வப்புலவர்களது கதையிலே பழைய புலவர்களது கதையைத் தனியே பிரித்தறிவது பெரியாருக்கும் இயலுவதொன்றன்று. புத்தம்புதிய உள்ளுணர்வாகித் தமது கதையோடு இயைந்து ஒன்றாய் ஒளிர்வது கண்டு அவர்களும் மகிழ்கின்றனர். நாமும் மகிழ்கின்றோம். ஆகவே உள்ளதும் இல்லதும் என்ற எண்ணம் எழுவதற்கு முன்னமே எழுந்த உள்ளுணர்வானது பொய்யுரை அல்ல என்பதை மறத்தலாகுமே! பொய்யுரை என்பது அறிவின் விளைவேயன்றி உணர்வின் விளைவாகாது.

இடம், பொழுது:- இவைதாம் அறிவுபடைத்துவைத்த பொருள்களேயாகும். இவையும் இவ்வுள்ளுணர்ச்சிக்கு

ஒருதலையாக வேண்டியவை அல்ல. நமது புலனுணர்வுகளை இன்னபொழுதில் இன்ன இடத்தில் நிகழ்ந்தன என்று புனைந்துரை வகையால் இடத்தோடும் பொழுதோடும் தொடர்புபடுத்திக் கூறுவதே உள்ளுணர்ச்சியின் உயர்ந்ததொழில் என்பர் சிலர். ஆனால் வானத்தின் வனப்புடையதொரு நிறத்தினை உள்ளுணர்வால் காணும்போது என்னபொழுது என்போம், என்ன இடம் என்போம். ஆ என அலறி எழும் அவலக் கவலையை உள்ளுணர்வால் உணர்கின்றோம். ஊக்கம் உயர்ந்தெழுந்து ஓங்குவதையும் உள்ளத்தே காண்கின்றோம். இவற்றில் இடம் எங்கே இருக்கின்றது. பொழுது எங்கே புகுகின்றது. ஆனால் கதையின் ஒவ்வொரு பகுதியிலும் பொழுதினையும் இடத்தினையும் குறித்துக்கொண்டே போகவில்லையா? குறித்தாலும் அதை முதலாகி முடிய முடிவனவல்ல; துணையாகித் தொடர்ந்திடையே துண்டு படுவனவேயாம். எழுத்தும் ஒலியும் உள்ளுணர்வல்ல. ஆகிலும் அவை பாட்டிற்குத் துணையாவதுபோல இடமும்பொழுதும் துணையாகின்றன. அதுபற்றித்தான் தொல்காப்பியனாரும் நிலத்தையும் பொழுதினையும் உரிப்பொருள் என்னாது அதனினும் வேறு பிரித்துத் தொடுத்து வைத்தார்.

அறிவு:—காட்சி, அறிவு, இடம், பொழுது என்றவையோடு நிற்க வேண்டுவதில்லை. அறிவின்செயல் எதுவும் உள்ளுணர்வாகாது. கதையிலேவருகின்ற பெயர்வழிகள் அறவுரைகளும் அறிவுரைகளும் பேசுகின்றார்களே என்றால் அப்பெயர்வழிகள் தமது உள்ளத்தின் நிலையினை உணர்த்தவேண்டி அவற்றைப் பேசுகின்றார்களேயன்றி அறிவு கொளுத்தவோ அறத்தைப் புகட்டவோ பேசுகின்றார்கள் இல்லை என்க. ஓடாவி எழுதிய படத்திலே செம்மையும் கருமையும் முதலான பல நிறங்கள் திகழ்கின்றன. இவை இயற்கை நூலறிஞர்கள் கண்டறிந்த செம்மை கருமை முதலிய பொதுத்தன்மையை உணர்த்தவா அப்படத்தில் அமைந்துள்ளன. அல்லவே. ஓடாவி கண்ட உள்ளுணர்வை வெளிப்படுத்தத் துணையாகி நிற்கின்றன அல்லவா? அதுபோலவே கதையில் வருவோர் பேசும் அறவுரையும் அறிவுரையும் பேசுவோரின் பெருந்தன்மையை உணர்த்தும் வகையால் உள்ளுணர்வோடு ஒன்றுபட்டு ஒளிர்கின்றன. கருங்கடலின் ஓரத்திலே வெண்டிங்கள் நீரில் மின்னிப்பொலிந்து எழுந்து பார்முழுதும் பால்மழை பொழிந்து முகிலிடையே தவழ்வதைக்கண்டு ஓடாவி அதனைத் தீற்றியபோதும், காதலனைப்பிரிந்த காதலி காட்டினிடையே கடலோடு கரைந்துருகித் தனிநின்று புலம்பிக் கதறுவதைக் கண்டுணர்ந்து இன்னிசைவாணன் யாழினைமீட்டி இன்னிசையாக நெகிழ்ந்துருகும்போதும், செங்கண் பொறி பறக்கச் சினங்கொண்டெழுந்து வெற்றி வெறிகொண்ட மேலாம் மறவனின் வெஞ்சமர்க்கு அஞ்சா நெஞ்சினைப் பாவாணன் பாடும்போதும், அறிவுக்கு என்ன வேலை? இவற்றிற்கு அறிவுரை ஏன்? அறவுரை ஏன்?

புலனுணர்வு:—(Sensations). உணர்வு அறிவினும் வேறு என்பதுகொண்டு வெறும் புலனுணர்வுதான் உள்ளுணர்வு என்று எண்ணிவிடுதல் ஆகாது. ஐம்பொறிகளின் வழியாக நமது உள்ளத்திலே நம்மையும் அறியாமல் பொருள்கள் பல போய்ப் பதிகின்றன. சிற்சில பொழுது நமது உள்ளத்திலே என்ன உலவுகிறது என்று எண்ணிப் பார்க்கின்றோம். திகைப்புல்லை மிதித்தவர் போல ஒன்றும் தெளியாது தயங்கி நிற்கின்றோம். அந்த நிலையை ஊன்றிப்பார்த்தால் உள்ளுணர்வுக்கும் புலனுணர்வுக்கும் உள்ள வேறுபாடு எளிதில் விளங்கும். உள்ளுணர்வால் நாம் கண்டபொருளோ உருப்பெற்று விளங்குகின்றது? புலனுணர்வாக மனதிற் பதிந்தவையோ உருவற்று உள்ளே அமிழ்ந்து கிடக்கின்றன? பலனுணர்வை எண்ணிப் பார்த்தால் நினைவிற்கு ஒன்றும் வருவதில்லை. அங்கு என்ன காண்கின்றோம். ஒன்றும் இல்லை. புலனுணர்வும் உருப்பட்டெழுந்து கலக்கம் இன்றி விளக்கமானால் அப்போது அதனை உள்ளுணர்வு எனலாம். சிலர் புலனுணர்வின் கூட்டமே உள்ளுணர்வு என்பார்கள். வெறுங் கூட்டமும் உள்ளுணர்வாகாது. ஒரு சண்டையோடு மற்றொரு சண்டையைப் பொருத்தி விட்டால் அமைதி வந்துவிடுமோ? அந்தப் புலனுணர்வின்கூட்டமும் குழப்பமாகவே இருக்கும். ஆனால் புலனுணர்வுகள் ஒன்று ஒருருப்பெற்று எழுந்து விளங்குமானால் அப்போது அக்கூட்டத்தை உள்ளுணர்வு எனலாம்.

நூலின் பகுதிகள்:—ஒன்று திரண்டெழுதல் வேண்டும். ஆனால் கதையில் பல பகுதிகளும், பல பாட்டுக்களும் காண்கின்றோமே என்றால் அவை உண்மையில் பிரிவுகள் அல்ல என்க. பாக்களில் பல எழுத்துக்கள் வருவதுபற்றி அவற்றை ஒவ்வோர் எழுத்துக்களாகப் பிரித்து ஒவ்வோர்பகுதி எனச் சொல்ல முடியுமோ? முடியாததுபோலப் பாக்களையும் பகுதிகளையும்பிரிவுகள் என எண்ணுதல் ஆகாது. உலகவழக்குப்பற்றி அவ்வாறு சொல்ல வேண்டுவதாயிற்று. உண்மையில் நோக்குமிடத்து கதைமுழுதும் ஒரே ஓர் உருவமாக ஒளிர்தல் வேண்டும்.

வெளியிடல்:—ஒன்று திரண்டெழுந்து உருப்பட்டு விளங்கினால்தான் உள்ளுணர்வு என உயர்த்திப் பேசலாம். விளங்கித் தோன்றுவதென்றால் என்ன? கண்டவன் கண்டதைக் களிப்பின் ஒருக்கால் கழறி விடுவான். நல்ல ஓடாவியானால் அவன் கண்ணெதிரே கண்ட நண் காட்சி அழகாகத் தோன்றுவதை அவன் மனக் கண்ணாடியில் வரைந்து விடுகின்றான். இன்னிசை வாணனானால் மனச்செவி குளிர இனிமையாகப் பாடி விடுகின்றான். பாவாணனோ அருஞ்சொற்றொடர்கொண்டு அழகாக உள்ளமுணர எழுதிவிடுகின்றான். இவ்வாறு வெளிப்பட்டுத் தோன்றாத வரையில் உள்ளுணர்வே இல்லை எனலாம். "உள்ளத்தினுள்ளே கண்டேன், அதை எடுத்துரைக்க இயலவில்லை" என்றால் அது வெறும் புரட்டேயாகும். எண்ணம் எல்லாம் சொற்களாகவோ உருவங்களாகவோ இசைகளாகவோ இவை போன்ற மற்றொன்றாகவோ இருக்கின்றன. எண்ணும்போது ஊன்றிப் பார்த்தால் பொதுவாக நாம் சொற்கொண்டே எண்ணிப் போவது கண்டு வியப்படைவோம். இவ்வாறு சொல்லாகவோ, உருவமாகவோ, இசையாகவோ தோன்றாத வரையில் எண்ணம் ஒன்றும் எழவில்லை என்று திண்ணமாகச் செப்பி விடலாம்! உள்ளுணர்வானது பாவாணனுக்குப் பாட்டாகவும் இன்னிசை வாணனுக்கு இசையாகவும் ஓடாவிக்கு ஓவியமாகவும் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. தோன்றாது போனால் உள்ளுணர்வும் தோன்றவில்லை என்று சொல்லிவிடலாம். வெறும் புலனுணர்வின் குழப்பந்தான் உள்ளே கூவுகின்றதெனலாம். நாம் கடலைப்பற்றி எண்ணவேண்டுமானால் அலையின் எண்ணம் வரும் ஒருவேளை; மற்றொருபொழுது அதன் கருமை நிறம் நினைவிற்கு வரும். மற்றவை தெளிவாக விளங்குவதில்லை. கனவுகண்டாற் போலவும், கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோலவும் உள்ளுக்குள்ளேயே கலங்கிக் குழப்பமாக இருக்கின்றன. ஊமன்கண்ட கனா என்ற உவமைகூட உரைத்தல் ஒண்ணாது. நமது நினைவிற்கு வரும் கருமையும் அலையும் கடல்முழுவதையும் உணர்த்தவில்லை என்று உணர்கின்றோம். இன்னும்பல அங்கிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் அப்படத்தை எதுகொண்டு நிரப்புவதென்பது தெரியவில்லை. அவையும் நினைவிற்கு வந்தாலன்றிக் கடலினை

விரித்துரைக்க முடியாது. அந்த நிலையிலே, "உள்ளிருக்கின்றது; வெளியிட முடியவில்லை" என்கின்றோம். உண்மையில் உள்ளேயும் ஒன்றும் இல்லை. உள்ளிருப்பது முன்கண்ட கடலின் புலனுணர்வுதான். அப்புலனுணர்வுகள் தலைமயங்கிக் கிடக்கின்றன. அவற்றில் ஒன்றேனும் தலைநிமிர்ந்தெழுந்து உலகை எட்டிப்பார்க்க வரவில்லை. எவ்வளவு தூரம் நினைவிற்கு வருகிறதோ அவ்வளவுதூரம் அதனைச் சொல்லிக்கொண்டே விளக்குகின்றோம். அந்த நிலையில் சொல்கள்தாம் நமது எண்ணங்கள். உலகில் பொதுவாக நாம் உள்ளுணர்வால் நன்குணர்ந்தன ஒரு சிலவேயாகும். மக்கள், விலங்கு போதல் வருதல், வெம்மை செம்மை பருமை, வன்மை என்ற சிற்சில சொற்களே நாமறிந்த உலகம். இவற்றிலே சில நமது உள்ளத்திலே மற்றையவற்றைவிடத் தெளிவாக விளங்குகின்றன. நம்முடன் பழகுவாரது முழுவடிவையேனும் தெளிவாக நமது மனக்கண் எதிரே நிறுத்த முடியுமா? ஒருவரதுமூக்கினையறிவோம், இன்னொருவரது நாக்கினை யறிவோம், மற்றொருவரது நிறத்தினை அறிவோம்; அவ்வளவே அவர்களைப்பற்றி நாம் அறிந்தவை. ஓடாவி சிதறித் தெறித்த நிறங்களைப்போல இந்தச் சொற்கள் நமது உள்ளத்தே இருக்கின்றன. சிறு குழந்தைகள் ஒரு கோடுகிழித்து அதுவே தந்தையின் உருவம் என விளையாடுவதுபோல மூக்கையும் நாக்கையும் மனதிலே எழுதிவிட்டு அவையே மக்களின் உருவம் என்கின்றோம்; உயிரே என்கின்றோம். எனவே, நாமறிந்தவை நாம் கண்ட பொருள்களை நினைப்பூட்டும் முதற்குறிப்பேயன்றிப் பொருள் முழுதும் அவையல்ல. உலக நடையை நடாத்த இந்த முதற்குறிப்பே போதியவையாக இருக்கின்றன. இவ்வாறு மயங்கிக் கலங்கிக் குழம்பி இருக்கும் நிலையில் உள்ள நாம் 'உள்ளத் துணர்கின்றோம். உரைத்திட வரவில்லை' எனப் பறைசாற்றி நம்மையும் பிறரையும் மயக்குகின்றோம். வெளியே சொன்னால் வெட்கக்கேடு. அதனை மறைக்க இந்த நெடுமொழி. ஆனால் உண்மை ஓடாவிகளும் இன்னிசை வாணர்களும் பாவாணர்களும் இவ்வாறு உலகை மயக்க முடியாது. அவர்கள் உள்ளுணர்வால் உணர்ந்தவை எல்லாம் ஒருருவாகி வெளித்தோன்றியே விளங்கும். கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர், என்பது அணி நூலில் இல்லை.

உணர்வே உரைநடை:—அணிநூல் எழுதும் படம் வெறும் புகைப்படம் அல்ல. உயிர் ஓவியமாகும். உள்ளுணர்வுதான் என்ன? ஊக்கம். உள்ளக்கிளர்ச்சி, மெய்ப்பாடு, சுவை என்பவை அல்லவா? ஆகவே அணி நூல் கூறுவன எல்லாம் உயிருள்ளனவாகவே உலவும் வெளியீடு வேறு உள்ளக்கிளர்ச்சி வேறு, என்று ஒரு சிலர் ஓயாது பிதற்றுகின்றனர். எழுதியநூல் இனியதாகஇருக்கின்றது. சொன்னோக்கும் தொடைநோக்கும் பொருள் நோக்கும் அருள்நோக்கும் வியக்கத் தக்கவாறு அமைந்துள்ளன. ஆனால் உயிர் இல்லாத பாடல்கள்; உள்ளக்கிளர்ச்சி ஒன்றும் பிறக்கவில்லை என்று ஆராய்ச்சிவாணர்கள் கூறுவதைப் பலமுறையும் கேட்கின்றோம். உள்ளக்கிளர்ச்சி ஒருருப் பெற்று உள்ளுணர்வானதும் உரைநடையாகி வெளிவருகின்றது என்று கண்டோம். இஃது உண்மையானால் செய்யுட் போக்கும் உள்ளக் கிளர்ச்சியும் ஒன்றாதல் வேண்டும். இவற்றினை வேறு பிரிப்பது பித்தர் தொழிலாகும். உயிர் இல்லை என்றால் உடலும் இல்லை; உருவமும் இல்லை; உரைநடையும் இல்லை. சொல்நோக்கும் பொருள்நோக்கும் வெறும் நோக்கந்தான்.

உள்ளுணர்வு:—ஆகவே உள்ளுணர்வாவது வெளிப்பட்டுத் தோன்றும் உணர்வு; தர்க்கஞானத்தினும் வேறாகித் தனிநிற்பது. உள்ளது இல்லது என்ற வேற்றுமையும், இடம் பொழுது என்ற எண்ணங்களும் எழுவதற்கு முன்னரே உள்ளது; அவை எழுந்தபின்னும் அவற்றிற்கு வேறாகி விளங்குவது. உருப்பட்டு வெளித்தோன்றும் வகையில் உள்ளே கலங்கிக் குழம்பிக் கிடக்கும் புலனுணர்வுக்கு வேறாகி விளைவது. உள்ளுணர்வு உண்டென்றால் அதனை வெளியிடவேண்டும். உள்ளுணர்வுதான் உரை. அவ்வுரை சொல்லேனுமாகுக இசையேனும் ஓவியமேனும் ஆகுக. உரையைத் தவிர உள்ளுணர்வு வேறல்ல. அதனினும் மிக்கதும் அல்ல, அதனில் குறைந்ததும் அல்ல.

சுவையாராய்ச்சி:—இதுவரை கூறியன எல்லாம் அணியின் இயல்பினை அறிவதற்கு வேண்டியவையேயாகும். நாம் ஆராய்வதும் அணியன்றோ. அணியின் பிறப்பிடம், சுவை, மெய்ப்பாடு என்பதனை இதனால் நன்கு அறிகின்றோம். ஆனால் சுவையினைக் கணக்கிட்டு எண்ணுவதால் பயனில்லை என்றும் அறிந்து கொண்டோம். சுவைபாட்டின் உட்பொருள் உலகம்போல் பரந்துகிடக்கின்றது. அதனை எண்ணி முடியாது. சட்டியும் பானையும் கிடக்கின்றன. எல்லாம் மண்ணால் ஆனவையே. அவற்றின் வேறுபாடு அவற்றின் வடிவ வேறுபாடேயாகும். அவ்வடிவ வேறுபாடே குயவனது அருமை பெருமையை நமக்கு வெளியிடுகின்றது. அஃதேபோலப் பாவலர்களது பாக்களின் முதற்பொருளாய் உள்ள சுவையினை அதன் வடிவ வேறுபாட்டு வாயிலாக ஆராய்தல் வேண்டும். வெறுஞ் சுவையினை எண்ணிக் கணக்கிடுவது உள்ளக் கிளர்ச்சியை ஆராய்ச்சி செய்யும் உள்ளத் தியற்கைநூல் அறிஞரது தொழிலாகும். உள்ளக் குறிப்பு உருப்பெற்றெழுந்து உயிர்பெற்றுலவுவதை ஆராய்ந்தறிவதே பாட்டினை ஆராய்ச்சிசெய்வாரது அரும்பணியாகும்.

நாம் செய்யவேண்டிய ஆராய்ச்சி எத்தகையது என்பது இதுவரையிலும் எடுத்தியம்பியவற்றினின்றும் எளிதிற் புலனாகும்.

தமிழ்ப் பாடம் 6.

நள வெண்பா

சுயம்வர காண்டம்.

(86-வது பக்கத் தொடர்ச்சி)

16. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

பதப்பிரிவு :—அஞ்சல் மட அனமே, உன்தன் அணி நடையும் வஞ்சி அனையார் மணி நடையும் விஞ்சியது காண பிடித்ததுகாண் என்றான், களி வண்டு மாண பிடித்த தார் மன்.

அன்வயம் :—களிவண்டு மாணப்பிடித்த தார் மன் "மட அனமே அஞ்சல். உன்தன் அணி நடையும் வஞ்சி அனையார் மணி நடையும் விஞ்சியது காணப் பிடித்தது காண்" என்றான்.

கருத்து:—இள அன்னமே, நீ பயப்படாதே உனது நடையோ அல்லது இம்மாதர்களின் நடையோ அழகிற் சிறந்ததென்று பார்க்கவே பிடித்தேன்" என்று நளன் அன்னத்திற்குக் கூறினான்.

பதவுரை.

களி - (கள்ளுண்டு) களித்த
வண்டு - வண்டுகள்
மாண - அழகாக
பிடித்த - தங்கியிருக்கின்ற
தார்- மாலை (அணிந்த)
மன் - மன்னன் (நளன்),
மட - இளமைபொருந்திய
அனமே - அன்னமே,
அஞ்சல் - பயப்படாதே.
உன்தன் - உன்னுடைய
அணி - அழகிய
நடையும் - நடையையும்
வஞ்சி அனையார் - கொடிபோன்ற இம்மாதர்களது
மணி - அழகிய
நடையும் - நடையும்
விஞ்சியது - எது அழகில் உயர்ந்தது என்று
காண - (நான் பரிசைசெய்து) பார்க்க
பிடித்தது காண்-உன்னைப்பிடித்தேன்பார். (வேறு உனக்கு ஒருதீங்கு செய்வதற்கல்ல)
என்றான் - என்று கூறினான்.

விளக்கம் :—என்றான் (பயனிலை). யார் என்றான்? மன் - மன்னன். எப்படிப்பட்ட மன்னன்? தார் மன்? மாலையை அணிந்த மன்னன். அது எப்படிப்பட்ட மாலை? பிடித்த தார் - தங்கியிருக்கின்ற மாலை. எது பிடித்த தார்? வண்டு. எப்படிப்பட்ட வண்டு? களிவண்டு-களிப்புடைய வண்டு. களிவண்டு எப்படித் தங்கியிருக்கின்ற மாலையை அணிந்த மன்னன் அவன்? களிவண்டு மாண பிடித்த தார் மன். (மாண - அழகாக.) [அம்மன்னன் யாரைக் கூப்பிட்டுச் சொன்னான்? தன் கையில் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த அன்னத்தைக் கூப்பிட்டுச் சொன்னான்] அன்னத்தை என்னவென்று அழைத்தான்? அனமே - அன்னமே. எப்படிப்பட்ட அன்னமே? மட அனமே - இளமை பொருந்திய அன்னமே. மட அன்னமே, என்று அழைத்து என்ன சொன்னான்? அஞ்சல் - பயப்படாதே, என்றான். [ஏன் அஞ்சவேண்டாமாம்? உன்னைக் கொல்வதற்காக நான் பிடிக்கவில்லையாதலால்] வேறு எதற்காகப் பிடித்தது? காணப் பிடித்தது - பார்ப்பதற்காகப் பிடித்தது. எது காண? விஞ்சியது காண - (அழகில்) மிகுந்தது எதுவென்று பார்க்க. எதற்கும் எதற்கும் இவ்விதம் ஒப்புயர்வு பார்க்க? நடையும் நடையும். யார் நடையும்? உன்தன் நடையும்- உன்னுடைய நடையும். உன்தன் எப்படிப்பட்ட நடையும்? உன்தன் அணிநடையும் - உன்னுடைய அழகிய நடையும். உன்னுடைய நடையும் இன்னும் யாருடைய நடையும்? வஞ்சி அனையார் நடையும் - பூங்கொடி போன்ற இம்மாதர்களது நடையும். அவர்கள் நடை எப்படிப்பட்டது? மணிநடை - அழகிய நடை.

விரிவுரை:—கொல்வனோ இவன் நம்மை என்று பயந்திருந்த அன்னத்திற்குத் தேறுதலாகவும், பிடித்துத் தந்த மாதர்களுக்கு உபசாரமாகவும் ஒருங்கே நளன் உரைத்த இவ்வார்த்தைகளின் நயம் பாராட்டத்தக்கது. மாதர்களுடைய கண்களுக்குக் கயல்மீனும், முகத்திற்குச் சந்திரனும், சாயலுக்கு மயிலும், உவமையாவது போல் நடையினழகிற்கு அன்னம் உவமை.

17. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

பொழிப்புரை :—சிவந்த தாமரையில் வசிக்கின்ற இலக்ஷ்மிக்குச் சமானமான அந்தப் பெண் பிடித்த ஒப்பற்ற அன்னம், கொடிய கொலையைக் குறிக்காத அரசனது சொற்களைக்கேட்டுக் கலக்கம்தீர்ந்தது. [செய்ய - சிவந்த. தையல் - பெண். அடு - கொல்கின்ற மாற்றம்- வார்த்தை.]

இது சுலபமான செய்யுள். இதற்கு நீங்களாகவே, வினாவிடை விளக்கம் எழுதிப்பார்த்துக் கொண்டால் நல்லது.

18. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே
யுன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமயந்தி யென்றோதுந் தையலாண் மென்றோள்
அமையந்தி யென்றோ ரணங்கு.

பதப்பிரிவு:— திசை முகந்த வெண் கவிகை தேர் வேந்தே உன்தன் இசைமுகந்த தோளுக்கு இசைவாள் வசை இல் தமயந்தி என்று ஓதும் தையலாள் மென் தோள் அமை அந்தி என்ற ஓர் அணங்கு.

அன்வயம் :— அன்வயம் அதுவே.

கருத்து :—'வேந்தே, குற்றமற்றவளும் அழகுமிகுந்தவளும் ஆகிய தமயந்தியே உனக்கு ஏற்ற நாயகியாவாள்' என்று அன்னம் நளனைப் பார்த்துச் சொல்லியது.

பதவுரை.

திசை - எல்லாத் திக்குகளையும்
முகந்த - தன்னுள்ளடக்கிய
வெண் - வெண்மையான
கவிகை - குடையினது நிழலில் செல்கின்ற
தேர் - இரதத்தையுடைய
வேந்தே - அரசனே,
உன்தன் - உன்னுடைய
இசை - கீர்த்தி
முகந்த - பெற்ற
தோளுக்கு - தோள்களுக்கு
இசைவாள் - நாயகியாய்ப் பொருந்தக் கூடியவள் யாரெனில்)
வசை - குற்றம்
இல் - இல்லாத
தமயந்தி - தமயந்தி
என்று - என்று
ஓதும் - சொல்லப்படுகின்ற
தையலாள் - பெண் (அவள் எப்படிப்பட்டவளென்றால்)
மென் - மெல்லிய
தோள் - தோள்கள்
அமை - மூங்கிலைப்போல்
அந்தி - அழகுடையவள்
என்ற - என்று சொல்லப்படுகின்ற
ஓர் - ஒரு
அணங்கு - தெய்வகன்னியைப் போன்றவள்.

விளக்கம்:— (இச்செய்யுள் முற்றிலும் அன்னத்தினுடைய வார்த்தை. நளனுக்குச் சொல்லியது) நளனை அன்னம் என்னவென்று அழைத்தது? வேந்தே - அரசனே. எதை உடைய வேந்தே? தேர்வேந்தே -

இரதத்தை உடைய அரசனே. அந்தத் தேரிற்குமேல் என்ன இருக்கின்றது? கவிகை - குடை. எந்த நிறக் கவிகை? வெண்கவிகை - வெள்ளைக்குடை. அக்கவிகை எப்படிப்பட்டது? முகந்த - மொண்டுகொண்ட, அதாவது தன்னுள் அடக்கிய கவிகை. எதைமுகந்த வெண் கவிகை? திசைமுகந்த வெண்கவிகை - பத்துத் திக்குக்களையும் தன்னுள்ளே அடக்கிய வெண்குடை. உலகெலாம் அடக்கிய குடைநிழலில் செல்கின்ற இரதங்களையுடையவனே, என்று அன்னம் நளனை அழைத்து என்ன சொல்லியது? இசைவாள் - பொருந்துபவள் (ஒருத்தியிருக்கின்றாள் என்று சொல்லியது) எதற்கு இசைவள்? தோளுக்கு இசைவாள். யாருடைய தோளுக்கு? உன்தன் - உன்னுடைய. உன்னுடைய எப்பேர்ப்பட்ட தோளுக்கு இசைவாள். முகந்த - கொண்ட. எதுகொண்ட? இசைமுகந்த - கீர்த்தி கொண்ட அவள்யார்? தையலாள் - ஒருபெண். எப்படிப்பட்ட தையலாள்? ஓதும் தையலாள் - சொல்லப்படுகின்ற பெண். என்ன என்று ஓதும் தையலாள்? தமயந்தி என்று ஓதும் தையலாள் - தமயந்தி என்று சொல்லப்படுகின்ற பெண். தமயந்தி எப்படிப்பட்டவள்? இல் தமயந்தி - இல்லாத தமயந்தி. என்ன இல்லாத தமயந்தி? வசைஇல் தமயந்தி? ஒருவித குற்றமும் இல்லாத தமயந்தி. அவள் யார் போன்றவள்? ஓர் அணங்கு - ஒரு தெய்வகன்னிகை போன்றவள். அவளை என்னவென்று சொல்லுவார்கள்? அந்தி என்று ஓர் அணங்கு - அழகுடையவள் (அந்தம் - அழகு, அதை உடையவள் அந்தி. பொன் உடையவளைப் பொன்னி, என்பது போல்) என்று சொல்லப்படுகின்ற ஒரு தெய்வ கன்னிகைக்கு நிகரானவள். எதைப்போன்ற அந்தி? அமை அந்தி - மூங்கிலைப் போன்ற அழகுடையவள். எது மூங்கிலைப்போன்றது? தோள் - (அவளுடைய) தோள்கள். தோள்கள் எப்படிப் பட்டவை? மென் தோள் - மிருதுவான தோள்கள்.

விரிவுரை :—உயிருக்கு உயிர் மாறாக அளிப்பது போல், அன்னம் தன்னைக் கொல்வதில்லை என்றுரைத்த நளனுக்குத் தானும் அவனுக்கு உயிர் அனையவளாவதற்கிருக்கும் பெண்ணொருத்தியின் செய்தியைச் சொல்லத் தலைப்படுகின்றது. அரசனுக்குரிய பல சின்னங்களில் வெண்குடை அவனது அருளுக்கு அடையாளம். ஆதலால் தன்னைக் கொல்வதில்லை என்ற அவனது அருளை நினைத்த அன்னம் குடையைக் கூறியது.

19. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்—
சொன்னமயி
லார்மடந்தை யென்றா னநங்கன் சிலைவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைத்து.

பதப்பிரிவு :—அன்னம் மொழிந்த மொழி புகாமுன் புக்கு கன்னி மனம் கோயில் கை கொள்ள சொன்ன மயில் ஆர் மடந்தை என்றான் அநங்கன் சிலை வளைப்ப பார் மடந்தை கோமான் பதைத்து.

அன்வயம் :—அன்னம் மொழிந்த மொழி புகாமுன், கன்னிபுக்கு (அவனது) மனக் கோயில் கைக்கொள்ள, அநங்கன் சிலைவளைப்பப் பார்மடந்தை கோமான், பதைத்துச் 'சொன்னமயில் ஆர்மடந்தை' என்றான்.

கருத்து :—அன்னம் சொன்ன சொற்களை முற்றிலும் கேட்பதற்கு முன்னேயே, தமயந்தியினது உருவமும் நினைவும் நளனது மனதில் குடிகொள்ளவே அவன் காதலுற்றுப் பதைத்து, 'நீ சொன்ன இந்த மயில் போன்ற பெண் யாருடைய மகள்?' என்று கேட்டான்.

பதவுரை.

அன்னம் - அந்த அன்னமானது
மொழிந்த - சொன்ன
மொழி - வார்த்தைகள்
புகாமுன் - (இவன் செவிவழியே) புகுவதற்கு முன்னால்,
கன்னி - தமயந்தியானவள்
புக்கு - புகுந்து
மனம் - (நளனது) மனமாகிய
கோயில் - கோயிலை
கைக்கொள்ள - தன் வசமாக்கிக் கொண்டதால்,
அநங்கன் - மன்மதன்
சிலை - தனது வில்லை
வளைப்ப - வளைக்கவே,
பார் - பூமியாகிய
மடந்தை - தேவியின்
கோமான் - நாயகனாகிய நளன்
பதைத்து - பதைத்து,
சொன்ன - (நீ) சொன்ன
மயில் - பெண்ணானவள்
ஆர் - யாரது
மடந்தை - மகள்
என்றான் - என்று கேட்டான்.

விளக்கம்:—என்றான் - என்று அன்னத்தைக் கேட்டான். (பயனிலை). யார் என்றான்? கோமான் - நாயகன். (எழுவாய்). யாருக்குக் கோமான்? பார்மடந்தை கோமான் - பூமிதேவிக்கு நாயகன் ஆகிய நளன். கோமான் எப்படி என்றான்? பதைத்து. ஏன் பதைத்தான்? வளைப்ப - வளைத்ததால். எதை வளைப்ப? சிலை வளைப்ப - வில்லை வளைத்ததால். யார் சிலை வளைப்ப? அநங்கன் சிலை வளைப்ப - மன்மதன் சிலையை வளைத்ததால். அநங்கன் ஏன் சிலையை வளைத்தான்? கைக்கொள்ள - வசமாக்கிக் கொண்டதால். யார் கைக்கொள்ள? கன்னி - கன்னியாகிய தமயந்தி. கன்னி எதைக் கைக் கொண்டதால்? கோயில் - கோயிலை. எந்தக் கோயிலை? மனக் கோயிலை - நளனுடைய மனமாகிய கோயிலை. எப்படிக் கைக்கொண்டாள்? புக்கு - புகுந்து. எதற்குமுன் இக்கன்னி நளனுடைய மனதிற்குள் புகுந்து அதைத்தன் வசமாக்கிக் கொண்டாள்? புகாமுன் - புகுவதற்கு முன்னால். எது புகுவதற்கு முன்? மொழி - வார்த்தைகள். எந்தமொழி? மொழிந்த மொழி - சொன்ன வார்த்தைகள். எது மொழிந்த மொழி? அன்னம் மொழிந்த மொழி - அன்னம் சொன்ன வார்த்தைகள். நளன் தமயந்தியின்பால் காமமுற்றுப் பதைத்து என்ன என்று கேட்டான்? ஆர் மடந்தை என்றான் - யாருடைய மகள் என்று கேட்டான். யார் யார் மடந்தை என்றான். மயில் - மயில் போன்ற பெண். எந்த மயில் யார் மடந்தை என்றான்? சொன்ன மயில் - நீ சென்ன மயில்போன்ற பெண்.

கன்னி கோயிலைக் கைக்கொண்டதால் அநங்கன் சிலை வளைக்கவே கோமான் பதைத்து, 'மயில் யார் மடந்தை' என்றான் : எனத் தொடரும்.

விரிவுரை :— முற்றிலும் குற்றமில்லாத தன்மை மானுட வகுப்பைச்சேர்ந்த எவருக்கும், மற்று இம்மண்ணுலகிலிருக்கின்ற எதற்கும் உரியதன்று. எவ்வளவு சிறந்த குணங்களை உடையவரிடத்திலும் சிறிது தோஷம் இருந்தே தீரும். எத்தனை கெட்டவர்களிடத்திலும் எள்ளளவேனும் குணம் இல்லாமற் போகாது. ஆதலால் பூரண குணமுடையனென்றும் குற்றந் தவிரக் குணமே இல்லாததென்றும் சொல்லத் தகுந்த விஷயங்கள் இவ்வுலகில் இல்லவே இல்லை. எனவே, எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அதனிடத்தி

லுள்ள குணங்களையும் தோஷங்களையும் நிறுத்துப் பார்த்துக் குணபாகம் அதிகமாயிருந்தால் நல்லதென்றும், தோஷபாகம் அதிகமாக. இருந்தால் கெட்டதென்றும் மதிப்பதுதான் இந்தக் கீழுலகத்திற்கு ஏற்றமுறை. ஆகையாற்றான்,

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

என்று திருவள்ளுவர் நம்மைஆராய்ந்து தெளிந்துகொள்ளச் சொல்கின்றார். எனின், எவ்வளவு சிறந்தவர்க்கும் மனிதராயின் எள்ளளவேனும் குற்றம் இருக்கும். இது மானுடர்க்குரிய விதி. இந்த விதியளவாகிய வசையும் இல்லை என்று ஒருவரைப் புகழ்ந்தால் அவர் தெய்வத்தன்மை அடைகின்றார். கம்பரும் இராமபிரானை ஓரிடத்தில் 'வசையில் ஐயன்' (குற்றமில்லாதவன்) என்றழைத்து அவனது தெய்வத்தன்மையை விளக்கி வைக்கின்றார். இல்லையெனில் இராமனது அலகிலா நற்குணங்களைக் கூறாது அவன் குற்றமில்லாதவன் என்று சொல்வது ஒரு பெருமையாகுமோ! முன்செய்யுளில் 'வசையில் தமயந்தி' என்றதிலும் இதே கருத்துத்தான் அமைந்திருக்கின்றது. எப்படிப்பட்டவருக்கும் இயற்கையாய் இருக்கக்கூடிய சிறிதளவு வசையும் இல்லாத தமயந்தி, என்றபடியினால் அவள் மானுட மகளல்லள் தெய்வ கன்னிகையே என்று நினைக்கவேண்டும். ஆகையாற்றான், அன்னம் அவளைப் பின்னும் அப்பாசுரத்தில் 'அணங்கு' என்று அழைக்கின்றது. அணங்கு என்பதற்குத் தெய்வப்பெண் என்றொரு அர்த்தம் இருக்கின்றது.

வசையில் தமயந்தி யென்பதாலும் அணங்கு என்பதாலும் தெய்வப்பெண்ணென முன் பாசுரத்தில் புகழ்ந்ததற்கு ஏற்ப அவள் குடிபுகுந்த நளனது மனமாகிய இடத்தை இச்செய்யுளில் கவிகோயில் என்று கூறினார். இத்தனைகாலம் கோயில் இல்லாதிருந்த தெய்வம் இன்றைக்கு ஓர் கோயில் தனக்கெனத் தேடிப் புகுந்துகொண்டதாம். 'கன்னி' மனக்கோயில் கைக்கொள்ள, என்ற தொடரில், கோயிலாகிய மனம், நளனுடைய மனம், அதைக்கைக்கொண்டது கன்னியாகிய தமயந்தி. ஆகையால், 'கன்னியாகிய தமயந்தி, நளனுடைய மனமாகிய கோயிலைத் தன்வசமாக்கிக்கொள்ள' என்பதே அதன் பொருள். அன்னம் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்திலேயே நளனது மனதில் தமயந்தியினது நினைவு நிறைந்துவிட்டது, என்பது அதன் கருத்து. அதாவது, நளனுக்குத் தமயந்தியின்பால்காதல் பிறந்தது. ஒருவரை ஒருவர் காண்பதால் காதல்பிறப்பது இயற்கை. இங்கு நளனுக்குக் கேள்வியாலேயே தமயந்தியின்பால் காதல் உண்டாகின்றது. சும்மா இருக்கின்றவரையில் தானும் சும்மா இருக்கின்ற மன்மதன், காதல் ஒருவர் மனதில் பிறந்தது என்று அறிந்தவுடன் வில்லும் கையுமாய் வந்து சேருவான். காமன் என்ற பேர் இவனுக்கு இருந்தாலும் மன்மதன் முதல்முதல் ஒருவருக்கு காதலைப் பிறக்கும்படி இப்பொழுது செய்கிறதில்லை. ஒருதரந்தான் அவன்தன் இயற்கைக்கு மாறாகத் தேவர்களது வேண்டுகோளுக்கு இணங்கித் தவநிலையிலிருந்த சிவபிரானிடத்தில் இந்தக் காரியம் செய்தான். அதற்கு ஏற்ற தண்டனையும் அவனுக்குக் கிடைத்தது. அவன் அநங்கன் (அங்கம் இல்லாதவன்) ஆனபிறகு காதல் தானாக உதித்த மனத்தை யுடையவர்களிடமே சென்று, பிறந்த காதலை வளர்த்துவைத்துக் காதலர்கள் விரைவிற் சேருமாறு தூண்டுவதே தன் கருமமாக இந்நாட்களில் விவகரித்து வருவதாகக் கவிகள் பாராட்டுகின்றனர். கன்னி, மனக்கோயில் கைக்கொள்ள, என்றதிலுள்ள 'கொள்ள', என்பது காரணப்பொருளில்வந்த வினையெச்சம். (வினையெச்சத்தின் இலக்கணத்தை முன் கூறியுள்ளேன். அதை மீண்டுமோர் முறை எடுத்துப் படிப்பீர்களாயின் நலம்). கைக்கொண்டதால், அநங்கன் சிலை வளைத்தான், அதாவது, நளனுக்குத் தமயந்தியின் நினைவு உண்டான காரணத்தால் மன்மதனும் தன் வேலையைத் தொடங்கினான். 'கொள்ள' என்னும் வினையெச்சம், 'வளைப்ப' என்னும் இன்னொரு வினைஎச்சத்தைக் கொண்டு முடிகின்றது. இனி 'வளைப்ப' என்பதும் காரணப்பொருளில் வந்த வினைஎச்சமே. அதுவும் 'பதைத்து' என்ற மற்றொரு வினை எச்சத்தைக் கொண்டு முடிகின்றது. 'பதைத்து' என்பது பதைக்கின்ற செய்கையும் இறந்தகாலத்தையும் காட்டுவதொழிய அதற்குவேறு பொருள் இல்லை. ஏனென்றால் வர, போக, செய்ய, அழ, அடிக்க என்பனபோல் அ என்னும் சப்தத்தில் முடிகிற வினையெச்சங்களுக்கு மாத்திரமே, காரணம், காரியம், அல்லது உடனிகழ்ச்சிப் பொருள்கள் உண்டு என்று கூறியிருக்கின்றேன். 'பதைத்து என்பது அந்த மாதிரி முடிகின்ற வினைஎச்சம் அல்லாததால் இதற்குப் பொருள் மாறுதல் இல்லை. பதைத்து' என்னும் வினைஎச்சம் 'என்றான்' எனும் வினைமுற்றைக் கொண்டு முடியும். கொள்ள—வளைப்ப—பதைத்து—என்றான். கன்னி கைக்கொண்டபடியினால் அநங்கன் சிலையை வளைக்க, அதனால் கோமான் பதைத்துக் கேட்டான். அநங்கன் சிலை வளைப்பதாவது, மன்மதன் பிறந்த காதலை மேன்மேலும் தூண்டத் தலைப்படுவது.

தன் காதலுக்குப் பாத்திரமாய அவளை அன்னமோ, வசையில்லாதவள் என்றும் அணங்கு என்றும் கூறியது. இது மேம்படப் புகழ்ந்த புகழ்ச்சியோ, அல்லது மெய்யாகவே அவளொரு தெய்வமோ, தெய்வமாயின் அவளை எய்துதற்கு இயலாதே, எனினும் தன் தோளிற்கு இசைவாள் என்றும் சொல்லியதே, என்று இன்னபல எண்ணி எண்ணி உற்ற ஐயம் தீரவேண்டி 'சொன்ன மயில் ஆர் மடந்தை' என ஆர்வத்தோடு கேட்டனன்,

குறிப்பு:— பதத்திற்கு இயற்கையாய் இருக்கின்ற பொருள் சந்தர்ப்பத்திற்கு ஏற்பமாறி அது வேறு ஒரு பொருளைக் குறிக்குமானால் அது ஆகுபெயர், என்று முன் சொல்லியிருக்கின்றேன். மாது, காரிகை, இவை 'அழகு' என்னும் அர்த்தம் உடையனவாய், அந்த அழகாகிய குணத்தையுடைய பெண்களைக் குறிக்கும்போது அவை குண ஆகுபெயர் ஆகின்றன. தையல் என்றாலும் அழகு என்று அர்த்தம். அதுவும் குணவாகுபெயராய் மாதர் என்னும் பொருளில் இதற்கு முன் 16-வது, 17-வது, செய்யுட்களில் வந்திருக்கின்றது,

இந்தச் செய்யுட்களில், மயில் என்றசொல் மயிற்பக்ஷியைக் குறிக்காது தமயந்தியை உணர்த்துவதால், இதுவும் இங்கு ஒரு ஆகுபெயர். ஆனால் குண ஆகுபெயர் அல்ல. ஏனெனில், மயில் ஒரு குணமல்லவே, காரிகை - அழகு அழகு ஒரு குணம், அந்த குணத்தை உடைய காரணத்தாள் ஒருத்தியும் காரிகை ஆனாள். மயில் குணமல்ல மயிலை உடையவள் என்ற காரணத்தால் தமயந்தியை மயில் என்று சொல்லவில்லை. சாயலில் மயிலைப் போன்றவளா யிருத்தலால், மயில் என்பது இங்கு ஒரு பெண்ணிற்கு ஆகின்றது. அதாவது மயிலைத் தனக்கு உவமையாய் உடையவள். இப்படி உவமையாய்க் கூறப்படுகின்ற பொருளுக்கு உரிய பதமே, எதற்கு அது உவமையோ அதனையே நேராகக் குறித்துவிடுமானால் அப்பொழுது உவமையாகு பெயர் என்று பெயர். ஆதலால் மயில் இங்கு உவமையாகு பெயராய் ஒரு பெண்ணை உணர்த்தியது. 'புகழேந்தி வாய்திறந்தால் தேன் பொழியும்,' என்று ஒரு வாக்கியம் அமைத்தால் அதில் தேன், என்பது தேன் போன்ற சொற்களைக் காட்டுவதால் உவமையாகு பெயரே. இனி ஊர்சிரிக்கும், நாடெல்லாம் கலங்கியது, என்ற உதாரணங்களைக் கொண்டு முன்னொரு சமயம் விளக்கியிருக்கின்ற இட ஆகுபெயரின் இலக்கணத்தையும் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

T. N. சேஷாசலம். B. A., B. L.

(89-வது பக்கத் தொடர்ச்சி)

5. வழியிற் கிடந்த விதி.

மடைநூற் செய்தியில் நன்றாகக் கைதேர்ந்த காந்திமதி அமுதுகள் விதம்பட ஆக்கி வைத்துத் தந்தையை உண்பதற் கழைத்தனள். அவரும் விருந்தினனுடன்சென்று இட்டவைகளை இனிதருந்தக் கலாநாதன் உண்டியின் சுவையைப் புகழ்ந்து சில பேசினான். பேச்சிலே ஆழ்ந்து புசிப்பதுமறந்தவர்க்குக் காந்திமதி, 'உணவின் பெருமையை உண்டுகாட்டும்,' என விளையாட்டாய் எடுத்துச் சொன்னாள். காந்திமதி இவ்விதம் கவற்சி நீங்கிச் சந்தோஷமா யிருப்பது தந்தைக்கும் கலாநாதனுக்கும் அளவற்ற மகிழ்ச்சியை யளித்தது. கந்தன் உணவருந்தச் சேராததை யவர் பார்க்காதிருந்ததற்கும் இதுதான் காரணமோ! மற்றுக் காந்தியுமா மறந்திருப்பாள். தனபாக்கியம்தான் கந்தனங் கில்லாததைக் கருணாகரருக்குத் தெரிவித்தனள். அதன்மேல் கருணாகரர் கந்தனை யூரப்பி அழைக்க அவனும் மேல்மாடியினின்று இறங்கி வந்தான். வந்தவனைக் கருணாகரர் நிமிர்ந்து பார்த்தார். கலங்கிய கண்ணாலும் வாடிய முகத்தாலும் அவன் இரவில் தூங்கியதில்லை என்பதை உணர்வதன்முன், பயணத்திற்கு ஒத்தஉடைதரித்து அவன் ஆயத்தமா யிருப்பதைக் கண்டார். "என்ன, கந்தா..." என்றவர் காரணம் வினவ நாவெடுத்ததைத் தடுத்து, "நான் பெருங்குன்றம் போகின்றேன்," எனத் தெரிவித்தனன் கந்தன். கருணாகரர் ஒருதரம் அவனை ஏறஇறங்கப் பார்த்துவிட்டுப் "புசித்தபின் போகலாம், உண்டியருந்த உட்கார்" என்றனர். உட்கார்ந்தா னெனினும் தன்முன்னிருந்த உணவைத்தொடவில்லை. காந்திமதி அவனருகு வந்து "அன்பில்லா ளிட்ட அமுதிற்கல்லவோ வாய் திறக்கமாட்டேனென்னும்" என்றுரைக்கவே, கந்தனது கண்கள் நீரைத் தாரை தாரையாய் வார்த்தன. காந்தியின் முகமும் மாறுபாடுற்றது. "நீ பெருங்குன்றம் போவது எதற்காகவோ, கந்தா!" என்றனர் கருணாகரர்.

"என்னை யழைத்துவரத் தந்தை ஆள்விடுத் திருக்கின்றார்.........நேற்றிரவு வந்தான்......பெரிய வேட்டையொன்று அங்கு........."

"இந்தப் பெரிய வேட்டை முடிந்து எப்பொழுது திரும்பி வருவாயோ?"

"திட்டமாய்ச் சொல்வதிற்கில்லை. அது என்பிதாவின் இஷ்டத்தைப் பொறுத்தது. ஒருக்கால் திரும்பாமலே தங்கிவிட நேரிட்டாலும் நேரிடலாம்." என்றவன் சொல்லி வரும்போது காந்திமதியின் கண்களைக் கலாநாதனது பார்வை யெட்டியது.

"அந்த உன் தந்தையின் விருப்பிற் கிணங்கியுன்னை இக்கூரையின்கீழ் யான் ஏற்றுக்கொண்டபோது, இவ்விதக்கொள்ளையும் வேட்டையும் தவிர்த்து நீ உத்தமத்தொழிலொன்று பழகுவதென்றல்லவோ ஏற்பாடு," என்று கருணாகரர் கடிந்து சொன்னார். இதற்குக் கந்தனோ ஆழ்ந்த செருக்குடன், "என்னை உமதிடம் அடைத்தபோது எளியனேன் இஷ்டத்தை எவரும் கேட்டதில்லை. ஆகையால் ஒருவித நிபந்தனையும் என்னைக் கட்டுப்படுத்தாது," என்று சட்டம் பேசினான்.

"இருப்பினும், ஓ, கந்தநாதபிரபூ! என்போன்ற தொழிலாளியிடத்தில் வேலைகற்கவென்றிருந்தநீர் உண்டுறங்கிக் காலம் கழித்துத் தரியையெல்லாம் கண்டபடி கெடுத்துவிட்டுச் சிறிது பயன்படும் வயதுவந்ததும் அகன்றுபோகின்றேன் என்று புறப்படுவது அழகாமோ—தங்களுக்குத்தான் தர்மமா!"

"இந்தக் கணக்கையெல்லாம் என் தந்தையுடன் தீர்த்துக் கொள்ளலாம். நானறுத்த இழையொன்றிற்கவர் ஏழுபொன்னாக எளிதில் ஈடுசெய்வார். அன்றியும் நீரெனக்கு இட்ட சோற்றிற்கும் ஏற்றபொருள் கிடைக்கும்." என அவர் மனம் உளையக் கந்தன் சொன்னான்.

இச்சமயம் கலாநாதன் அவர்தம் உரைக்கிடைப் புகுந்து "ஆம், கருணாகரரே, பெற்றுக்கொள்ளும். ஊரூராய்க் கொள்ளையிடும் கள்வருக்குப் பொருள் ஒரு கணக்கா!" என நகைத்தான்.

"ஓஹோ, மித்திரா," என்று அவன் பக்கம் கந்தன் திரும்பி, "நின்னை மறந்தேன். உன்னுடனும் நான் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியவனாகின்றேன்," எனக் கூறி எழக் கலாநாதன் கையமர்த்தி, "குட்டி மித்திரரே, ஆயின், கைக்கெட்டாத் தூரத்தில் நின்றே கணக்கைப்பாரும். நேற்றிரவுபோல் கைகலந்து பின்னும் கணக்குப்பார்க்க எனக்கு இஷ்டமில்லை" என்றனன்.

"என்கையால் இரண்டொருதுளி இரத்தம் உதிரப்பெற்றதே நின்னனைய இழிகுலக் கம்மியற்குப் பெருமையாகவேண்டும். எனினும் துளிக்கித்தனையென்று பொன்னும் தந்து.........."

"சீ சீ, இடம்பக் குரங்கே, வந்தமொழியை நீயே விழுங்கு!" என்று எழுந்திருக்கும் கலாநாதனைக் காந்தி தடுத்து, "இரவோடு கழிந்ததைப்பின்னும் இழுத்து மறுபோர்புரிவது அழகிதேயோ," எனத்தகைந்துரைக்க இருவரும்உத்தரம் உரையாது விலகினர். அதன்பின் கந்தன் கருணாகரர் எதிர்நின்று, "கருணாகரப்பெரும விடையெனக்குத் தந்தருள்வீர். என்பால் நீர் பூண்டொழுகிய அன்பு எந்நாளும் மறத்தற் கொத்ததன்று. அறிவிலியான் இழைத்துள பிழையனைத்தும் பொறுப்பீர். ஐய, பிரிவுமொழி யொன்றுளது......" என்று அவன் சொல்லிவருகையில் காந்திமதி, "இவ்வகந்தனை ஒழித்து நீ போகின்றனையோ, கந்த?" என உருக்கமாய் வினவினள். "ஆம், உயிர்நிற்க உடலேகும் புதுமையும் இன்றுகாண்," எனக்கூறிக் கந்தனும் கால்சுமந்து அகன்றனன்.

இதன்பின் மற்றையவர் ஒருவாறு உண்டி முடித்து எழுந்தனர். அங்கிருந்த மூவரும் தத்தம் மனத்துள் உழக்கிய எண்ணங்களில் ஆழ்ந்தவராய்ப் பேசும்வகை கண்டிலாது சிறிது காலம் இருக்குமளவில், கருணாகரர், "பெண்ணே, காந்தி, நான் வேலைகருதிச் சிறு நேரம் வெளியேக வேண்டி யிருக்கின்றது. நான் வருமளவும் உன் காதலன் போகாவண்ணம் நீயே பார்த்துக் கொள்" என்றியம்பியெழ அவரது கருத்தையுணராத கலாநாதன் தானும் உடன்வருவதாகச் சொன்னான். அதற்கவர், "சீ அசடே, நீயிரு இங்கே" என்றுரைத்துப் போய்விட்டார்.

கலாநாதனும் காந்திமதியும் கருணாகரர் செய்த இச் சிறு சூழ்ச்சியால் மறுமுறை தனியே விடப்பட்டனர்.

கண்ணொடுகண் எதிர்நோக்க இருவருக்கும் வெட்கம். ஒருவரை யொருவர் பார்த்தல் தவிர்ந்து நாற்புறமும் ஆராய்ந்தனர். இருவரும் உரையாட விரும்பினரெனினும் முதல்மொழி ஓராது வருந்தினர். கடைசியில் கலாநாதன் எவ்வாறோ தன் நாவிருக்குமிடந் தேடிவிட்டனன். 'காந்தி' என்றனன். அவளும் "ஏன்!" என்றாள். "பார்த்தாயா," என்று தன் அங்கியின் பையினின்று மோதிரத்தை எடுத்துக்காட்டினான். "எதிது!" என்றாளவள். "உனக்கு," என்றான். "எதற்கு?" என்றாள். வினாவிடையாகத் துவக்கிய இச்சம்பாஷணை கலாநாதனது விடாமுயற்சியால் பிரசங்கத்திற்குவந்தது "காந்தி, இரதிதினத்தன்று காலையில் நீ யமர்ந்த தலம்நாடித் துயிலெழுப்பும் கடமை தவிர்ந்து துயின்றிருந்தேன். சீரடிநோவ நடந்து நீயே யென்னை எழுப்பினாய். நானிழைத்த பிழைக்கு அபராதமாகவும் நினது பெருந்தன்மைக்குப் பிரதிபலனாகவும் இம்மோதிரத்தை என்கை ஏற்க இசைவையோ?" என்றதைக் காட்டினான். காந்திமதி சிறிதளவு தாழ்ந்திருந்தாள். "இல்லை, என் மானம் காத்த பெருந்தகைக்குநான் நன்றி செலுத்தவே வந்தேன். செலுத்திய நன்றிக்குப் பிரதிபலன் பெறுவதெங்ஙனம் ..எனினும் நண்பராய்த் தந்த நன்கொடை மறுக்கத் தகுவதன்று," எனக் கையையவள் நீட்டக் கலாநாதன் மாக்கலம் கவிழ்ந்தோன் புணை பற்றுமாப்போல் தாவிச்சென்று அச்சிறு விரல்நுனி பற்றிக், "காந்தி, யானே யிடுகின்றேனிதை," என்னுமளவில் அவளோ பின்னடி பெயர்ந்து "ஐய, மாதர் விரலிற்கு மோதிரம்பூட்டிப் பலசால் பயின்றிருக்கின்றீர் போலும்," என்றியம்பிப் புன்னகை புரிந்தனள். அந்நகைகண்டும் இது ஊடல்மொழி என்றுணரா நம் சும்மியன், "போர்க்கோலம் கொண்டேகும் ஆண்மகற்கு யான் மார்க்கவசம் பூட்டவே பயின்றுளேன், சரதம். விபரீத வார்த்தையும் நீ கூட்டவல்லையோ, காந்தி," எனக் கழறினான். காந்தியின் கண்கடை 'யானறியததோ' வெனவிளம்பியது. "காந்தி நீ மோதிரத்தைத்தான் ஏற்காயேல் இப்பெட்டியின் மேலுள பாசுரத்தைப் பார்த்தேனும் மனமிரங்கல் கூடும்," என்று கலாநாதன் நீட்டிய பெட்டியை வாங்கி அவள் அதன்மேல் தீட்டியிருந்த குறளடியைப் படித்தாள். படித்து நாணங்கொண்டாள். "ஆகையால் காந்தி......" என்று காற்றாடிச் சூத்திரத்தைச் சிறிதேனும் கற்காத கலாநாதன் ஆரம்பிக்க அவளும், "கலாநாதரே, தெள்ளிதில் சிலபொருள் நானுமக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கின்றது. நும்மறை புகுந்து யான் அனந்தல் தீர்த்ததன் தன்மையை ஒளியாது சொல்லத் தாழ்வேனாயின் நீர் வீணெண்ணம் பல வளர்ப்பதற்கு வழியுண்டாகும். தீர வீர வாய்மையின் தவ மாயினீர்; பெற்றுள புகழிற்கேற்ற பெருமையும் உடையீர்........"

"நில் நில் காந்தி, என் சிறப்பைச்சொல்லி நீ யெடுப்பதெல்லாம் பின்வரும் வசைக்கே பாயிரமாகக் கண்டுளேன். 'வாய்மையன்......வள்ளல்......ஆனால், வெறியன்......கொலைஞன்'........என்று தானே தொடரப் போகின்றாய்?"

"எடுத்ததை முடியக்கேட்பீர். சாதாரண வெறியரல்லீர், கொலைஞருமல்லீர். தண்ணளியும் நல்லறமும் வைத்ததோர் களஞ்சியமாகின்றீர். எனினும் அகங்காரப் பேய்க்கு ஆளாகித் தோள்வலிச் செருக்கினால் வீண்போர் தேடி விழுகின்றீர். கைதான் சிறிது பதறாது கட்டிவைத்துக்கொண்டு 'பொறுத்தவரெவரவர் பெரியோர்' என்பதற்கிணங்கி நடக்கலாகாதா, என வேண்டுகின்றேன்."

"விட்டேன் போரை, மெல்லியல் காந்தி, எனக்கினி நீ விதித்ததே சட்டம். மற்று, நின்பால் யான் எதிர்வேண்டுவதும் ஒன்றுண்டு. மனமோ குரங்கென மாறும் தன்மையது. இந்த விரதம் வழுவாவண்ணம் என்னைக் காத்தற்கொத்த அரசியும் நீயே யாவாய்."

'மனம்திறம்பாச் செய்கைக்கு மாதர்தம் உதவி என்?"

"ஒவ்வொரு அமையத்தில் செருக்கோ சீற்றமோ விஞ்சி, இக்கைதான் மனத்தையும் மீறி உடைவாளைத் தேடுமாயின், ஒருத்தி நீ என்னகந்தனில் இருப்பது நினைத்து உனக்குக்கொடுத்த வாக்கிற்குப் பழுதஞ்சி மதமும் வெகுளியும் மாளுமே இவ்வுபகாரம் நீ யென் பொருட்டுச் செய்யலாகாதா?"

"சித்தசபலத்திற்கு உடன்பிறந்தா ளொருத்தியின் அன்புதான் இன்றியமையாததென்று நீர் கருதினால்..."

"சகோதர மித்திர பாவத்தைவிட்டுப் பத்தினியாகத்தான் பேசாயோ, என் கண்ணே! மனையாள்மாட்டு மறைநெறி கற்றவோர் மேன் மகனாவேனே! நிற்பயந்த தந்தையோ பெரிதும் உவப்பர்."

"தாதை மனந்தாண்டி எந்நாளும் நடந்தறியேன். ஆயினும், ஐய, அவரது விருப்பிற்கும் நம்முடைய அன்பிற்கும் ஒருங்கேயான் இணங்க இயலா வகையில் அரியதோர் இடையூறுளது."

"உண்மையே. நிகரற்ற நின் பேரழகுடன் நான் பொருந்துவது எங்ஙனம்? இருப்பினும், என் புயபல பராக்கிரமத்தைப் பார். கல்வியிற் குறைந்தவனாயினும் நின்சொற்களையே கலையெனத்தெரிந்துயர்வேன். இசைபாட வல்லேனல்லேன். எனினுமென்! அன்புப்பெருக்கொடு நீ யளையும் இன்னிசையை இவ்விரண்டுதினம் கேட்டபின் கல்லும் பாடாதோ கீதம். கேட்டவர்க்கு இல்லையென்னும் இழிவுரைசொல்லாது நீ எடுத்து நல்க என்பால் குறைவற்ற செல்வமுமுளது. நின் தந்தையும் மூப்பில் முதிர்கின்றார். அவர்தானும் நம்முடன் வந்து வசிக்கட்டும். என்னையே யீன்றதாதையாய்ப் போற்றுவேன். பூவும் மணமுமென நாம்மாநகரிதனில் பொருந்தி வாழ்வோம். மனையறம் வளர்ப்போம். விருந்தினரோம்புவோம்......"

"கலாநாதரே, நீர் விரும்பும் வாழ்க்கை நலமனைத்தும், எம்மிறைவன் திருவருளால் சபலமாகட்டும்...... அதற்குற்றதுணை மாத்திரம் மற்றொருத்தி யாதல் வேண்டும்" எனச் சொல்லின் திட்பம் நாவிற்கின்றி யுரைத்தனள் காந்திமதி. ஆர்வமெல்லாம் அவிந்த கலாநாதன், பாவம், "ஆயின், என்னை நீ யடியுடன் வெறுக்கின்றனை?" என்று கையற்றுக் கேட்டான்.

"அற்றன்று!"

"மற்று, உன்காதற்குப் பாத்திரமாயினான் யாவனோ?'.

"பயனில வினவி இவ்வேழையை வருத்துவானேன், அவ்வாறுமன்று!"

"அக்காட்டுப்பூனை .....கந்தன்தானே! சரி, சரி, அவன் பார்த்த பார்வைக்கெல்லாம் இப்பொழுதல்லவோ மறைபொருள் விளங்குகின்றது!"

"நானிருந்த நிலைகண்டு மிரங்காது என்னை நீர் நிந்திக்கப் புகுந்தால் எளியள்யான் என்னசெய்ய இயலும். கறுவித்திரியும் கந்தன்குணத்தை மாற்ற முயன்றேனன்றிப் பிறிதொன்றில்லை"

"கந்தனுமல்லானாயின்.........பட்டுடையினுள் புழுவெனக் கிடக்கும் காமுகப் பதர்களிலேதேனும் நீ கண்ணுற்றவாறுண்டோ காந்தி? ஊன்விற்று ஊன்வளர்க்கும் இழிதகைக் கணிகையர் தம்மொடு நில்லாது மெய்வருந்திப் புகழ் ஓம்பும் நும்மனோர் மனை நின்ற கற்பையும் இரக்கமின்றி வஞ்சித்தகலும் கயவர்தம் வலையிலா சிக்கினை, ஒருத்தி நீ.........இன்னு மொன்றுளது......."

"இதனை விடுக. என் னெதிர்நின்று உரைத்தற்கு ஒத்தன அல்லா இம்மாற்றம் நினைத்தலும் அழகிதேயோ!"

"காந்தி, நின்மாட்டு யான் பெரியதோர் பழுதிழைத்தேன். மனத்தையும் மலிந்து ஆர்வம்பாய்ந்ததால் நிகழ்ந்ததிது. பொறுப்பாய். எனினும்......எனினும்.... நின் காதற்குத்தான் குறியாயுள்ளான் யாவனோ! அறிவனேல் அப்புண்ணியற்கு யான் எண்ணிலாப் பூசையே புரிவேன்!"

"எனதுள்ளம் ஊறிய அன்பு தான் பெருகி நாடுங் கடல் நீயன்றி யெங்கும் காண்கிலென்......"

'காந்தி, காந்தி.. என்னினியாய்......தேவர்காணாத் தெள்ளமுதே..."

"நில் நில், கலாநாதா, ஆயினும்...விதியெனும் அணையொன்று வழியில் கிடக்கின்றது," என்றனள் காந்தாரநாட்டுக் கட்டழகி.

"நின்னருளுண்டாயின் விதியையும் எளிதில் வென்ற என்னொரு ஆற்றலைக்காண் இதோ......" என்று கலாநாதன் சொல்லி முடிப்பதற்குள் கருணாகரரது தலைகதவு வழித்தோன்றியது. "கலாநாதா, இவ்விடம் வருதி. காக்கொணாக் கருமமுளது, வருதி," எனவழைத்தனர்.

தன்னைமறந்து தவித்திருந்த கலாநாதனும் காந்திமதியை விட்டேகினான், கருணாகரர் கதவோரம் இதுகாறும் ஒளிந்து காற்றாடிச் சூத்திரத்தைக் கைவிடாதவராய்ச் சமயமறிந்து கலாநாதனை விலக்கினரோ, அல்லது இருந்த சமயமும் அவர் வந்த வரவும் காகதாலியமாய்ப் பொருந்தியதோ அறியோம். எது எவ்வாறாயினும் கலாநாதன் ஆற்றலைக்காட்டாது அகன்றதே நலமென்பதில் ஐயமில்லை. தோள்வலியே தலைவிதிக்கும் மருந்தெனும் மனப்பான்மையனான அவன் ஆற்றலின் போக்கு அவ்விருவரையும் எங்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்குமோ. இப்பொழுது விதிமறுப்பினும் அவளருளேனும் மாறியிராதன்றோ?

கம்ப ராமாயணம்

பால காண்டம்

T. N சேஷாசலம் B. A. B. L. (87-வது பக்கத் தொடர்ச்சி)

2. நாட்டுப் படலம்.

பற்றியே வொன்றைவிட் டொன்று பாய்ந்திலர்

உலகெலாந் தானேயாக உள்ளுவா ருள்ளந்தோறும் அலகிலா வடிவிற்றோன்றி அமர்ந்திடும் கோயிலென்ன நிலவுமக் கடவுள்தன்மை நிரந்தர முணர்ந்த அந்தக் கோசல தேசம் வைகும் குலக்குடிமக்கள்யாரும் யாவருக்கும் மாறிமாறி ஆராதனை புரிவதே தம் கருமமெனக் கொண்டு, இன்னதற்கு ஏற்றதாய்ப் பாடொன்றும் படாதுபெற்ற எண்ணிலாச் செல்வத்தை ஈத்துவக்கும் வாய்மையராய் வாழ்ந்த ஒரு வாழ்க்கையினைக் கம்பரெனும் பெரும்புலவன் பாடிவைத்த படலத்துள் படித்தொருகால் நினைத்தும் நினைத்தொருகால் படித்தும் பார்க்கும்போது, நமது கருத்தெனும் சீரையில் அமிழ்தே கலந்து எழுதியவோர் சித்திரம்போல் எழுகின்ற தோற்றம் எவ்வாறு அமைகின்றதெனில், வெண்மதி பொழியும் தண்ணிலாத் தவழ நறுமணங்கமழும் குழவிக் காற்றுச் சிறுமணல் தூற்றிச் சில்லென உலவப் பிரணவத்தின் எழுத்தென்னச் சுருண்டெழும் அலைகள்பாய ஓங்காரநாதத்தை ஒலிக்குமப் பாற்கடலின் கரையோரம் தனியமர்ந்து, கையினைத் தலைக்கணைத்து மேல் துணியே பாயலாகப் படுத்திருக்க நம்மையே நாம் கண்டுகொள்ள நேர்கின்றது.

நாடளாவிய அமைதியென்ன! செவிக்கும் சுவைக்கும் இனிமை யென்ன! முன்சென்றது கருதாது நாளைச் சேர்வது நினையாது அமைந்தவொரு சாந்தியென்ன. அல்லும் பகலும் அசுரருக்கு ஆற்றாது அலைகின்ற அமரர் தம்வாழ்க்கைதான் என்ன வாழ்க்கை. எக்காலம் தமக்கு எத்தீங்கு நேருமோ என்ற சிந்தையராய்க் கண் கொட்டாது இருப்பதாலன்றோ அத்தேவரும் இமையவராயினர். இருவோரும் முயன்றெடுத்த அமிர்தத்தை நன்றியுமின்றித் தாமே மடுத்துண்ண வேண்டுமென்ற எண்ணத்தராய அவர்க்கு வேறு எக்கதி கிடைக்கும். இக்காலம் நாமறிந்த தேயமெலாம் தேவலோகமே ஆய்விட்டன. தற்கால நாகரிகம் வளரவளர எந்திரத்தாலும் வர்த்தகத்தின் விரிவினாலும் போர்முறைத் தேர்ச்சியாலும் ஆக்கம் தேடுவதும் தேடியதைப் பிறர்க்களிக்காது காப்பதுமாகித் தனக்குத் தனக்கு என்னும் கொள்கையினால் எங்கெங்கும் அல்லலும் அமளியுமுற்றுப் பெருந்தவம் ஒன்றுமியற்றாமலே அத்தேவகதி நாம் அடைந்துவிட்டது பெரிதும் பாராட்டத் தக்கதே!

கோசலத்திலே கொள்ளையோ கொள்ளை யென்றும் கொலையோ கொலை யென்றும் வறுமையோ வறுமை யென்றும் வலியோர் மெலியோரை நலிந்தனரென்றும், பிணிஇது பொறுக்கமாட்டே னென்றும், ஆள்பவர் செய்யும் கொடுமையோ கொடுமை யென்றும் கூக்குரலிட்டபேர் இல்லை. காலைச்சூரியன் உதிக்கும் முன்னம், "பால்மறவாப் பாலகர்காள், கஞ்சிக்கும் வழியில்லாக்காளைகாள், பிணியிலும் வயதிலும் வாடிய மாந்தர்காள், வம்மின், வந்து இங்கு நும்மின்னுயிரின் ஒரு பகுதி வழக்கம்போல் இந்நாளும் உதத்துச் செல்மின்", எனக்கோசலத்தில் பஞ்சாலைகளும் எந்திரக் கூடங்களும் கூவியழைக்கும் தீக்குரலில்லை. வந்த அம்மக்களது உயிரோடு உடலையும் தேய்த்துத் தேய்த்துப் பிழிந்துகொள்ள இருப்புச் சக்கரங்கள் உருமி உருமி உருள்கின்ற ஒலியில்லை. 'கொன்றேன் கொன்றேன்' என்று அறைகூவிப் பின் கொன்றுவிட்டுப் போகின்ற கடுவேக வண்டிகள் அங்குப் பரக்கவில்லை. மற்று, அந்நாட்டின்கண் இருந்த ஒலியெல்லாம் தொகுத்த கம்பர்,

188989.

"ஆறுபா யரவ மள்ள ராலைபா யமலை யாலைச்
சாறுபா யோசை வேலைச் சங்குவாய் பொங்கு மோதை
ஏறுபாய் தமர நீரி லெருமைபாய் துழனி யின்ன
மாறுமா றாகித் தம்மின் மயங்குமா மருத வேலி.

[மருதநிலத்தில், ஆறுகள் பாய்கின்ற அரவமும், மள்ளர்கள் கரும்பு என்னு முதலிய ஆலைபாய்ச்சுகின்ற அமலையும், அவ்வாலையிலிருந்து கரும்பினது சாறு பாய்கின்ற ஓசையும், கடற்சங்கின் வாயிலே நீர்பொங்குகின்ற ஓசையும், எருதுகள் பாய்கின்ற முழக்கமும், எருமைகள் நீரில் துளாவுகின்ற சப்தமும், இவைகள் ஒன்றோடொன்று கலந்து ஒலிக்கும்] என்று காட்டினர்.

'வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்துமின்றி' வேறொன்றும் செய்வதற்கு அமையாக் கோசல மக்கள் இருந்த நிலை மிகவும் சாந்தமானது. காலைமுதல்

மாலை வரையில் வெளியலைந்து என்செய்வோம் என்றும், மாலையிலிருந்து காலைவரையிலும் உள்ளிருந்து மீண்டும் என்செய்வோம் என்செய்வோம் என்றும் காலும் மனமும் உழல்வதொரு நாகரிகம் அவர் பெற்றிலர். கோர்ட்டிலும் குதிரைப் பந்தயத்திலும் பொருள் செய்யச் சென்றறியார். புயற்காற்றில் மொத்துண்ட சிறுகுருவிபோல் ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி எத்தைத் தின்றால் பித்தம் தெளியுமென்று திகைப்புற்றுத் திரிந்திலர். நெய்கின்ற குழலன்ன வாழ்க்கை, நாகரிகம் முதிர்ந்த நமக்கே உரியது. கண்கொட்டாது நாம் பகையஞ்சி வாழ்கின்ற தன்மையில் தேவர்களுக்கு நிகராயது போலவே, பரபரப்புடன் காலும் நிலம்பாய நேரமில்லாது அலைகின்றபடியாலும் அவ்வமரரே ஐயமின்றி ஆகிவிடுகின்றோம். ஒன்றினின் றொன்றற்கு உருண்ட வண்ணமாய்ப் புரள்கின்ற இந்நாள் வாழ்க்கையை வைதிகழ்ந்த ஆங்கில அறிஞர் மாத்யு ஆர்னல்ட் என்பவர் (Mathew Arnold... the life that rolls people from change to change) கோசல தேசத்தி னமைதியைக் காணப் பெற்றிருப்பாராயின் பெரிதும் மகிழ் வெய்துவார்.

கோசலத்தவர், பாவம், தேவர்களல்லர். தேவகதி பெற்ற நம்மவரும் அல்லர். ஆதலால் அந்நாட்டின்கண் அனைத்துயிரும் விழித்தகண் வாங்காமல் அலைகின்ற தன்மைபோக்கி,

நீரிடை யுறங்குஞ் சங்க நிழலிடை யுறங்கு மேதி
தாரிடை யுறங்கும் வண்டு தாமரை யுறங்குஞ் செய்யாள்
தூரிடை யுறங்கு மாமை துறையிடை யுறங்கு மிப்பி
போரிடையுறங்குமன்னம் பொழிலிடையுறங்குந்தோகை.

[சங்குகள் நீரிலே உறங்கும். எருமைகள் மரநிழலிலே உறங்கும். மாந்தரணிந்த பூமாலைகளின் நடுவிலே வண்டுகள் உறங்கும். திருமகள் தாமரையில் உறங்குவாள். வேர்களுக்கு இடையே ஆமைகள் தூங்கும். நீர்த்துறைகளில் இப்பியும் நத்தையும் தூங்கும். நெற்போர்களின்மீது அன்னப்பக்ஷிகள் தூங்கும். மயில்கள் சோலையில் துயிலும்]

இன்னவாறு இனிதுயில் அமர்கின்ற பிராணிகள் சிலவற்றின் செவிக்கும் வயிற்றிற்கும் உணவு எளிதிலே கிடைப்பதுமாகும். பிள்ளையை வளர்க்கும் பாடு ஈன்ற தாய்க்குச் சிறிதுமில்லை. பாலூட்டுந்தாயும் தாலாட்டுந் தாயும் வேறுவேறாய் யாவர்க்கும் இயற்கையே அமைத்துத் தருகின்றது எவ்வாறெனில்,

சேலுண்ட வொண் கணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி ளைர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்டசேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதாராட்டும் பண்ணை.

[பண்ணைகளில், சிவந்த கால்களையுடைய பெண் அன்னங்கள், தமது குஞ்சுகளைப் பெருமைவாய்ந்த தாமரைகளுக்கிடையே படுக்கவிட்டுத் தாம், சேல்மீன் ஒத்த கண்களையுடைய மாதர்களைப்போல் அழகாக நடந்து திரிய, அக்குஞ்சுகளோ, அங்குப் படிந்த எருமைகள்* வீட்டிலிருக்கின்ற கன்றுகளை நினைக்க அதனால் மடியினின்று அவிழும் பாலையும் அருந்தித் தவளைகள் கூவுகின்ற ஒலியே தமக்கு தாலாட்டாகவும் துயில் கொள்ளும்.]

* காலுண்ட சேற்றமேதி, என்பதற்குச் சேறுபடிந்த கால்களையுடைய எருமை என்பது பொருள். உண்ட, என்பதற்குப் புதைந்த என்று பொருள்கொண்டு, கால்கள் சேற்றிலே ஆழ்ந்து புதைய அதனால் உயிரிழக்க நேரிடுமோ என வெருவித் தாம் உயிரிழந்தால் கன்றிற்கென்று மடியில் சுரந்திருக்கும் பால் அதற்கு உதவாமற் போய்விடுமோ வெனக்கலங்கி அதனால் பால் சோர்ந்ததென்று எண்ணுவது கோசலத்தின் இயற்கைக்கு மாறாகும். வெருவிக் கலங்குதல் அங்கு இல்லை ஆதலால்.

மருதத்திலும் நெய்தலிலும் எழுகின்ற இசைகளைக் குறிஞ்சியிலும் முல்லையிலும் உள்ள மக்களும் மாவும் அரிதின் நுகர்ந்து இனிதுறங்குமாறு :—

கொன்றை வேய்ங்குழற் கோவலர் முன்றிலிற்
கன்று றக்கும் குரவை கடைசியர்
புன்ற லைப்புனங் காப்புடை போதரச்
சென்றி சைக்கு நுளைச்சியர் செவ்வழி.

[மருதநிலத்தில் உழத்தியர் பாடுகின்றகுரவைப் பாட்டு முல்லை நிலத்தில் இடையர் இசைக்கின்ற புள்ளாங்குழலின் ஒலியோடு தழுவி, அவர் முற்றத்தில் கட்டியிருக்கும் கன்றுகளை உறங்கச் செய்யும். நெய்தல் நிலத்து வலைச்சிகள் பாடுகின்ற செவ்வழி என்னும் பாட்டினை, மலைமீது தினைப்புனங் காத்தமர்ந்த குறச் சிறுமிகள் கேட்டுத் தூக்கமெய்தக் கொல்லையும் காப்பழிந்து கிளிகள் கதிர்களைக் கொள்ளை கொள்ளும்.]

துயிலமர்ந்த தன்மையைப் போன்றே அந்நாட்டின்கண் துயில்நீத்து எழுகின்ற செய்தியும் இனிமையுடைத்து. உறக்குவதும் இன்னிசை அங்கு எழுப்பவதும் இன்னிசையே.

குயிலினம் வதுவை செய்யக்
கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடு
மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம்
பனிமலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச்
செவ்வழி முரல்வ சோலை.

[கிளைகளுக்கிடையே குயில்கள் மணம்செய்து கொள்ளவும், மாதர்களாடும் நடனமேடையைவிட அந்த இடத்தை அழகுசெய்யும்படி மயில்கள் ஆடவும், குளிர்ந்த தண் தாமரைப் படுக்கைவிட்டு நெருங்கிய சிறகுடைய ராஜஹம்ஸங்கள் துயிலெழவும், சோலையின்கண் வண்டுகள் செவ்வழி என்னும் உதயராகத்தைப் பாடிக்கொண்டிருக்கும்.] அதுவன்றி,

தெள்விளி சிறியாழ்ப் பாணர்
தேம்பிழி நறவ மாந்தி
வள்விசி கருவி பம்ப
வயின்வயின் வழங்கு பாடல்
வெள்ளிவெண் மாடத் தும்பர்
வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கட் டோகை
யின்றுயி லெழுப்பு மன்றே.

[சிறிய யாழ் இசைத்துத் தெள்விளி என்னும் பண்ணைப் பாடகர், இனிய மதுவை உண்டு வார் இறுக்கிய மத்தளம் முழங்க எங்கெங்கும் பாடுகின்ற பாடல்கள், வெள்ளிபோன்ற வெண்மையான மாடத்தின்கண் ஒளி வீசும் பசும்பொன் கட்டிலில் அமர்ந்த அழகிய கரிய கண்களையுடைய மயிலனைய மாதர்களைத் துயில் எழுப்பும்]

செவிக்கினிய இசையோடு உறங்குவதும், உறங்கிய பின் செவிக்கினிய இசையோடும் எழுவதுமாய் அமைந்த நாட்டில் அவ்விருபோது மல்லாது மற்றைப் போதுமே இசையும் பாடலுமே, கதைகள் சொரிகின்ற செவிநுகர் கவிகளுடன், கலந்தொலிக்குமென்று கம்பர் சில கவிகளால் காட்டியுளர். நன்மணமும் எங்கும் கமழ்ந்தநாடு அந்நாடு. மைந்தரும் மங்கைமாரும் மிகுந்திருந்த தன்மையைச் சாற்றவருகின்ற கவி பாடிய இரண்டு பாசுரங்களும் தாமே மணங்கமழ்கின்றன.

வெண்டளக் கலவைச் சேறும்
குங்கும விரைமென் சாந்தும்

குண்டலக் கோல மைந்தர்
குடைந்தநீர்க் கொள்ளை சாற்றில்
தண்டலைப் பரப்புஞ் சாலி
வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டலிட் டோடு மண்ணும்
மதுகர மொய்க்கு மாதோ.

[குண்டலம் தரித்த அழகிய மைந்தர்கள் ஆடிய நீரில், வெண்மையான கலவைச் சந்தனக் குழம்பும், குங்குமத்தோடு சேர்ந்த வாசனைத் திரவியங்களும் எவ்வளவு கரைந்து போயின என்னும் மிகுதியை நாம் கூறவேண்டுமானால்,—குளிர்ந்த சோலையும் நெல்வயலும் அதனைச் சேர்ந்து வண்டலிட்டு ஓடும் மண்ணும் எங்கும் இவராடிய நீர் பாய்ந்து தேங்க அவ்வாசனையை விரும்பி வண்டுகள் மொய்த்த வண்ணமாயிருக்கும்.]

புதுப்புனல் குடையு மாதர்
பூவொடு நாவி பூத்த
கதுப்புறு வெறியே நாறும்
கருங்கடற் றரங்க மென்றால்
மதுப் பொதி மழலைச் செவ்வாய்
வாட்கடைக் கண்ணின் மைந்தர்
விதுப்புற நோக்கு மன்னார்
மிகு தியை விளம்ப லாமே.

[ஆற்றின் புதுவெள்ளத்தில் குளிக்கின்ற மாதர்களது பூவும் கஸ்தூரியும் மணக்கும் கூந்தலினது நன்மணமே கருங்கடலின் அலைகளும் வீசும் என்றால்--தேன்போன்ற மழலைச்சொற்கள் இயம்பும் சிவந்த வாயுடையராய் வாள் போன்ற கடைக்கண்களால், மைந்தருக்கு விருப்பம் விளையும்படி, பார்க்கின்ற மாதர்களது மிகுதியைச் சொல்வது கூடுமோ !]

புகையுமுண்டு கோசலத்தில். பஞ்சு திரிக்கின்றதெனப் பேர்வைத்து ஆட்களின் உயிரையே பொசுக்கிப் போக்கும் ஆலைகளின் கரிப்புகையன்று. செல்வம் பெருக்குகின்றேன் என்று சொல்லி மக்களின் இரத்தத்தைக் காய்ச்சி வார்க்கும் எந்திரச் சாலைகளின் இருண்ட புகையன்று. வர்த்தகத்தை வளர்க்கின்றேன் என்று பேசி, பஞ்சத்தையே பரப்புகின்ற இரயிலும் கப்பலும் கக்குகின்ற கரும் புகையன்று. நாடு காக்கின்றேனென்று வெடிமருந்து சூழ்கின்ற நரகப் புகையுமன்று. மற்று எவைதாம் எனில்,

அகிலி டும்புகை யட்டி லிடும்புகை
நகிலி னாலை நறும்புகை நான்மறை
புகலும் வேள்வியிற் பூம்புகை யோடளாய்
முகிலின் விம்மி முழங்கின வெங்கணும்.

[மாதரார் தம் கூந்தலுக்கும் மாடங்களுக்கும் ஊட்டுகின்ற புகை. சமையற் செய்கின்ற புகை. விளங்குகின்ற கருப்பாலைகளினின்றும் வாசனையோடு எழுகின்ற புகை. வேதவிதிப்படி செய்கின்ற யாகங்களின் புகை. இவையெல்லாம் கலந்து மேகம்போல் எங்கும் பரவின]

புகையிவை போகவிட்டுத் துன்பம் நாம் பெற்ற இந்த வகையினை எண்ணி எண்ணி வாயெலாந்திறந்து வாளா நகுவதோ, நல்லதல்லாக் கரிப்புகை வளர்ப்பார் தம்மைத் தகைவதோ, யாதோ தருமம், என்றிடில் இரண்டுமன்று. இருக்கின்ற நிலையினை இகழ்வது எளிது. மற்றுப் பிறனொருவன் வந்து நம்மைக் கெடுத்தான் என வைவது அதனிலும் எளிது. மாந்தர்களது மனோபாவம் மாற மாறப் புகையின் வகையினையும் மாற்றிவைக்குமாறு முயல்வதே உலகத்தோடு ஒத்து வாழ்பவர்க்கு உரிய கருமம்.

மாந்தரெல்லாம் கிளைஞர் புடைசூழ விருந்தோடுண்ணும் பெருஞ் சோற்றமலையும், இன்னிசை வாத்தியங்களோடு மத்தளந் தழுவிப்பாடும் பாணர்தம் பாடலோசையும், சந்தனமும் கஸ்தூரியும் அகிலொடும் வேள்வியின் புகையொடும் கலந்து கமழும் நறுமணமும் நீங்காத அந்நாட்டில் யாவும் எங்கணும் இனியன. தேனன்றி வேறொருதுவும் பெருகாத நாடாயின் அதிற் கைப்பன காண்பதரிது. ஆலையிலிருந்து பாய்கின்ற கரும்பின் தேனும், பாளைகளினின்று சொரிகின்ற தேனும், சோலையிற் கனிகள் பழுத்தொழுகுந் தேனும், மைந்தரும் மகளிரும் அணிந்த மாலைகள் துளிக்கின்ற தேனும், ஒன்று சேர்ந்து கரை கடந்தோடிக் கடலோடு கலக்க அங்கு மீனெலாம்கூட உண்டு மகிழும் என்றால் இனிமைக்கு அங்கு என்ன குறை!

மெய்யினிற்கும் அங்குக் குளுமையோடு மென்மை வாய்ந்த இன்பம் எய்தியதென்பதைக் கம்பர் 'ஊதைகள் சொரிவன உறையுறு மருதம்,' (குளிர்ந்த காற்று சின்னீர்த் திவலைவீசி உலவும்) என்று ஓரடியில் நம் நினைவினிற் கூட்டுகின்றனர். கண்ணிற்கினிய காட்சிகள் அந்நாடெங்கும் இயற்கையே அமைத்துவைக்க மக்கள் அவைகளைத் தனி இடத்தில் நாடிச்செல்ல நிமித்தமில்லை. இயற்கையை அனுபவிக்கின்ற அம்மாந்தரது உள்ளமே உவகை பூரித்திருப்பதால் பொழுது போக்கிற்கென்று மாலைச் சங்கங்களுக்கும் (clubs) வேடிக்கை பார்ப்பதற்கென்று காட்சிச்,சாலைகளுக்கும் (theaters) தேடியடைவானேன். உண்மையை ஆழ்ந்து கருதுவோமாயின் மனக்கவலை மிகவுற்ற மாந்தரே, அதனைச் சிறிது போதேனும் தம்மினின்று விலக்கிவைக்க நினைத்துத்தான் இவ்விடங்கள் தஞ்சமென அடைகின்றனர். விதனம் மிகுந்த பேர்கள் தேடுமிடத்தை வேடிக்கையிடம் என்று சொல்வது விபரீதம். மனையின்கண் வந்தவுடன் தொல்லை பல சூழுமெனும் பயத்தினால் வெளியே இருந்தவரையில் இலாபம் என்ற வோர் நினைவினோடு 'கிளப்' எங்கே 'ஸினிமா' எங்கே, நாடகக் கொட்டகை எங்கே என்று திரிகின்றனர். இந்த அலைச்சலைத்தான் ஆங்கிலக்கவி ஷெல்லி என்பவர் (Shelly :—This mad unrest which men miscall delight) என இடித்துரைத்துள்ளார். இயற்கையோடமைந்து வாழக் கற்றவர்க்கோ, எங்கெங்கும் காட்சி எங்கெங்கும் நாடகம்.

கோழிகிளறிய மேட்டினிற் றோன்றும் இரத்தினங்களை அயல்நின்று பார்த்திருந்த குருவிகள் மின்மினிப் பூச்சியென வெண்ணித் தம்கூட்டிற்கு விளக்காக அவைகளைக்கொண்டு சேர்க்கக்கண்டு நகைப்பார் ஒருபுறம். இளம்பருவ மங்கையரது தாமரைபோன்ற முகத்தில் ஒளிர்கின்ற கண்ணை வண்டுகள் தம் பெடை என்று எண்ணிக்காமுற்று அருகணைகின்றது நோக்கி வியப்பார் மறுபுறம். ஐம்படைத்தாலி புரள்கின்ற மார்பினில் வாயினின்று மாலையாக உமிழ்நீர் வழியும் குழந்தைகளுக்குப் பாலூட்ட எடுத்த சங்கினைப்பற்றும் தாயர் கை குவியச் சந்திரன்படக் குவிந்த தாமரையோ இதுவென மகிழ்வார் மனைவாழ்க்கையின் மெய்யின்பம் நுகரவல்ல நன்மக்கள். கடற்கரை சென்றுலங்கு நுளைச்சிச் சிறுமிகள் முச்சில் முச்சிலாக முத்துக்களை வாரிவந்து தம் முன்றிலில் சிற்றில் கட்டிச் சரியாக வராததால் சினத்தோடு சிதறிவிடுகின்றதைக்கண்டு சிரிப்பதுமாகும். ஆற்றின் ஓரத்தில் வளர்ந்த கமுகின் பாளையினின்று பாய்ந்த கள்ளை நீரிலுள்ள வாளைமீன் மிகக் குடித்துக் குதிப்பதைக் கண்டு வியப்பார் ஓர்புறம். வேறு என்ன புகல்வது ! நாடனைத்தும் இயற்கையே புகுந்து நடிக்கும் ஒரு நாடக மேடையாகுமே.

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்

தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ.

[சோலையில் மயில்கள் ஆடவும், தாமரைமலர்கள் விளக்குக்களைப் போல் அலர்ந்து காட்டவும், மேகங்கள் மத்தளம்போல் முழங்கவும், குவளைமலர்கள் பார்ப்பவரென கண் விழித்திருக்கவும், தெளிந்த நீரலைகள் திரைகளைப்போல் எழுவதும் விழுவதுமாக, வீணையின் இசைபோல் வண்டுகள் இனிதுபாட, மருதம் கொலுவீற்றிருக்கும்]

ஐம்புலன்களும் அமைதியோடு அமர்ந்த இன்பம் நுகர்வதற்கு இயன்றநாடு கோசலத் திருநாடு. மனத்திலே தாயராய் தனக்கென்று அலைபாத மாந்தரை இன்பம் இருக்கும்இடம்தேடித் தானே வந்தெய்தும். அஃதின்றி இன்பமொன்று நமக்குப் புறத்தேயுளதென்று நெடுந்தூரம் நினைத்து ஒன்றொன்றாய்ப் பற்றிப்பற்றி அது 'இன்று இன்று' என்று விட்டுவிட்டுக் கலகமும் குழப்பமும் பொறாமையும் பகையும் போராட்டமும் எஞ்சி நிற்க இந்நாள் காண்பதே நம்கடன் ஆயிற்று. இந்நிலை கண்டு சகியாத சில பெருமனமுடையோர் அதனைப் போக்கவேண்டுமென்று முயல்பவராகி மீண்டுமக் கலகமும் குழப்பமும் செய்தே, பொறாமையும் பகையும் பாராட்டியே போராட முன்னின்று போக்குதற்கு எண்ணுவது யார் செய்த பாவமோ! எண்ணமோ நல்லதாகத் தீயினைத்தீக்கொண்டு அவர் அவிக்க முயல்வதும் இவ்வுலகமே இந்நாள் செய்த தீவினை தானோ!

நாலடி நானூற்றின் திறம்.

T. A. கனகசபாபதி முதலியார்.
(சென்னை எஸ். பி. ஜி. ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்)

பண்டைக் காலத்துத் தண்டமிழ் வளர்த்த நந்தமிழ்ப் புலவர்கள் பாடிய நூற்கள் பல. அவையுள் சொற்சுவை பொருட்சுவைநிறைந்து அணிகளைப் பணியாகக்கொண்டு அறம் பொருள் இன்பம் பயப்பனவாய் இலகும் நூற்கள் யாவும் கீழ்க்கணக்கு மேற்கணக்கு என்னும் இருபாற்பட்ட சங்க நூற்களுள் ஒருபாற்படும். இப்போது யான் ஆராய்வான் எடுத்துக்கொண்டதும், மக்கள் பேரின்பம் அடைதற்கும்பெரிதும் வழிகாட்டியாய் இருப்பதுமாகிய நாலடி நானூறு, கீழ்க்கணக்குப் பதினெண் நூற்களுள் ஒன்றென்பதை உலகு அறியும். இந்நூற்கு ஆசிரியர் சமண முனிவர் பலர் எனக்கூறும் கதை யொன்று பல ஆண்டுகளாக வழங்கிவருகின்றது. அது வருமாறு:—

“வற்கடஞ் சென்றமையின், அவரவர்க்குரிய நாட்டினைவிட்டுப் பாண்டி நாடு புக்க எண்ணாயிரஞ் சமண முனிவர்களை வரவேற்று உக்கிரப் பெருவழுதி யென்பான் உண்டி உறையுள் முதலியன உதவிப் புறந்தந்தனன். அவரவர் நாடு செழிப்புற்றமை தெரிந்ததும் அம்முனிவர்கள் தத்தம் நாடு செல்லப்பரிந்து அரசனைத் தமக்கு விடைதருமாறு பன்முறை வேண்ட அவன் கல்வி யறி வொழுக்கங்களிற் சிறந்த அன்னாரைப் பிரிய மனமின்றி விடை தாராதிருந்தனன். அஃதறிந்த முனிவர்கள் தலைக்கொரு பாவாக எண்ணாயிரம் பாக்க ளியற்றித் தத்தம் இருக்கையின் கீழிட்டுப் பிறரறியா வண்ணம் இரவின்கண் மதுரை நீங்கிச் சென்றனர். மறுநாட்காலை யரசன் அம்முனிவர்களைக் காணாது கவலைகொண்டு அவர்களிருக்கைகளை ஆராய்ந்துழி அவ்வவர் இருக்கையின்கீழ் ஒவ்வொரு பாவமைந்த ஏடு இருக்கக் கண்டு ஒன்றற்கொன்று ஒப்புநோக்க ஒன்றோடொன்று கருத்து வகையான் ஒவ்வாமை யுணர்ந்து அவற்றை வையையாற்றின் எறியுமாறு ஏவினன். எறியுண்ட ஏடுகளுள் நானூறு எதிரேறிக்கரை சேர்ந்தன. அங்ஙனஞ் சேர்ந்தமை கண்டு வியந்து அவற்றைத் திரட்டி ஒரு நூலாக்கி 'நாலடியார்' எனப் பெயர் புனைந்தனன்.

இக்கதை அநேக விஷயங்களில் பொய்யெனக் கொள்ளுவதற்கு இடனுண்டு. அரசர் கடமையாவது தம்மிடத்து வந்த முனிவர்களைக் காத்தலும் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடத்தலுமே. அங்ஙனமிருக்கத் தத்தம் நாடு செல்ல விரும்பிய முனிவர்களுக்கு விடைகொடாதிருந்தது அரசற்கு அழகன்று. அவர்களது கல்வி ஒழுக்க மேம்பாட்டால் விடை கொடுத்திலன் அரசன் எனக்கூறிப் பாண்டியில் அவர்களை நிகர்த்த பலர் இல்லை என்பது பெறப்படும். அது தண்டமிழ் வளர்த்த பாண்டிய நாட்டிற்கு ஓரிழுக்கே. பின்னும் அரசன் உத்தரவு கொடாதிருக்கும் பொழுதே முனிவர்கள் தத்தம் ஊர்களுக்குத் திருடர்கள்போல இரவில் சென்றனர் என்றால் முனிவர்களுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்கள் அவர்களிடத்து இருந்தில என்பது பெறப்படுதலின் இங்ஙனம் உயரிய கருத்துக்கள் அமைந்த பாக்களைப் பாடிய முனிவர்களிடத்தும் புரைதோன்றுகிறது. முனிவர்கள் யாவர்? அவர்களுக்கு உரிய ஓரிடமும் உண்டோ? உலகம் யாவும் அவர்கள் உறைவிடம் அன்றோ? ஒருநாளேனும் உண்டி உறையுள் தந்தவனிடத்தே கூறாது செல்லுதல் பெரியோர்க் கழகாமோ? தலைக்கொரு கவி எழுதி வைத்துவிட்டுச் சென்றது செய்ந்நன்றி அவர்கள் மறந்ததற்கோர் உய்வு ஆமோ?

அன்றியும் கதையின்படி ஒவ்வொரு பாடலாக அவ்வெண்ணாயிரம் ஏடுகளில் காணப்பட்டவைகள் ஒன்றோடொன்று கருத்துவகையான் ஒவ்வாமை உணர்ந்தன்றோ அவைகளை வையையின் எறியுமாறு ஏவினன் மன்னன். அங்ஙனம் எறியுண்ட பாட்டுடை ஏடுகள் நீரின் எதிர்நோக்கி நானூறு ஏடுகள் கரையைச் சென்றடைய அவற்றை எடுத்துப் பார்த்து மகிழ்வுற்றனன் அரசன் என்றால், அவைகள்யாவும் கருத்து வகையான் ஒற்றுமையுடையனவாகவே இருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி இந்நூலின் பாக்களுட்சில பொருளில் ஒன்றற் கொன்று வேற்றுமை உடையனவாகக் காணப்படுதலின் இந்நூலைப்பற்றி வழங்கும் கதை முற்றும் பொய்யெனக் கொள்ளுவதற்குச் சிறிதும் ஐயமில்லை.

பின்னும், இதற்கு ஆசிரியர் பலர் எனக் கூறுவதற்குக் காரணம் யாதெனில், ஒருபாட்டிடைக் காணப்படும் கருத்திற்கு வேற்றுமை உடையதாகவும் ஒற்றுமையுடையதாகவும் பலபாக்களிடத்தே கருத்துக் காணப்படுதலேயாம். அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமல்ல. ஏனெனின், ஒருகாலத் துதிக்கும் உணர்வு போல் எல்லாக் காலத்தும் நிகழுமென்பது நியதியல்ல. வயதும் அனுபவமும் முதிர முதிர அறிவும் கொள்கையும் வேறுபடும் என்பது உண்மை. ஓரிடத்துக் கூறியபொருட்கு ஒற்றுமை யுடையதாகவும் வேற்றுமை யுடையதாகவும் ஆசிரியன் கூறுவானாயின் கூறியது கூறல் மாறுபடக்

கூறல் என்னும் குற்றங்களின் பயன் படுமே எனின், இவ்வாசிரியன் நூலொன்று எழுதவேண்டுமென்னும் கருத்துடையவனாய் இந்நூலை இயற்றியவகைத் தோன்றவில்லை. பெரியோர்கள் தத்தம் மனத்தில் தோன்றும் கொள்கைகளை அப்போதைக் கப்போதே எழுதிவைத்தல் மரபாகலான், இவ்வாசிரியனும் தனக்கு ஓய்ந்த காலங்களிலே அப்போதப்போது தன் மனக்கோளை எழுதி இருப்பன் எனக்கொள்ளுதல் மிகவும் பொருத்தமுடைத்து.

அன்றியும், திருவள்ளுவராலே அதிகார அடைவின் கீழ் எழுதப்பட்ட திருக்குறளை ஆதாரமாகக்கொண்டு அதிகார அடைவில்லாத நாலடி நானூறாகிய இந்நூற்கும் ஒவ்வொரதிகாரத்திற்குப் பப்பத்துப் பாடல் என்னும் நியமங்கொண்டு பாகுபாடு செய்தமையே ஓர் அதிகாரத்தே காணப்பட்ட பொருட்கு ஒப்ப மற்றோரிடத்தும் காணப்படுவதற்குக் காரணம். இங்ஙனம் பெருங் குற்றத்தை ஒருவன் இயற்றப் பின்னுளோர், ஆசிரியன் கூறியது கூறினன் என்னும் பழிப்பிற் படுவனே என்றெண்ணி அக்குற்றம் அவனைச் சாரா வண்ணம் இந்நூல் பலரால் இயற்றப்பட்டதென்று கூறிப்போந்தனர்.

இந்நூல் நாலடி என்னும் பெயர் எங்ஙனம் பெற்றது எனின், சிலர் பாண்டியன் பாட்டுடை ஏடுகளை ஆற்றில் எறிந்துழி நீரை எதிர்த்து நானூறு பாவேடுகள் நாலடி சென்றன வென்றும் ஆதலின் நாலடி என்னும் பெயர் அவை பெற்றன வென்றும் கூறுவர். அற்றன்று, பாக்களுள் வெண்பாவே சிறந்தது. அதிலும் நாலடி வெண்பாவே மிகச் சிறந்ததாகலின் பின்னுளோர் இந்நூற்கு நாலடி எனப்பெயர் புனைந்தனர். இதனைத் தோல்காப்பியம் செய்யுளியல் 471-ஆவது சூத்திர (பேராசிரியர்) உரையிற் காண்க.

இப்புத்தகத்திற்கு ஆசிரியர் பலரல்ல ஒருவனே என்பதற்கு அகப்புறச் சான்றுகள் பலவுள.

அகச்சான்றுகள்.

இந்நூற் பாக்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வோராசிரியன் எழுதியிருப்பானாயின் கடவுள் வணக்கம் இருத்தற்குக் காரணமில்லை. சிலர் கடவுள் வணக்கம் உரையாசிரியர் ஒருவரால் இயற்றப்பட்டதென்று கூறுகிறார்கள். அக்கவியை நன்றாக நோக்கும் பொழுது இந்நூலாசிரியன் கவியென்றே கொள்ளுவதற்கு இடனுண்டு. நச்சினார்க்கினியர் பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள், உரையாசிரியர்கள் காப்புச் செய்யுள்களைப் பெரிய நூல்களில் உதாரணமாக எடுத்துக்காட்டுவது வழக்கமல்ல. அங்ஙனமிருக்க நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி குணமாலையா ரிலம்பகத்தின் 101-ஆவது பாட்டிடைவரும் “வானிடு சிலையில்” என்னும் தொடருக்கு எடுத்துக் காட்டாக “வானிடு வில்லின் வரவறியா” என்றார் பிறரும் எனக்கூறி இருத்தலை நன்கு நோக்கின், காப்புச்செய்யுளை இயற்றியவர் நாலடி ஆசிரியனே என்பதற்குச் சிறிது ஐயமில்லை. இதுநிற்க, நம்மனத்தில் ஒருதரம் நிகழ்ந்த கருத்தும், நம் உடம்பில் ஒருமுறை நிகழ்ந்த செயலும் திரும்பத்திரும்ப நிகழும் பெற்றியன, என்று மன அமைப்பும் உடல் அமைப்பும் நன்கறிந்த புலவர் கூறுவர். அதனால் கவிகளின் கருத்தும் வாக்கியத்தொடர் முதலியனவும் அவர்கள் நூற்கள் முழுவதும் மாறிமாறி வருதலை நாம் காண்கிறோம். பாடுங்கால் அன்னோரின் உணர்வின்றியும் மாறி அவை வரத்தக்கன. ஓராசிரியனா லியற்றப்பட்ட திருக்குறளிலும் கருத்தும் வாக்கியத்தொடர் முதலியனவும் மாறி மாறி வருதலைக் காண்க.

துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி (130-9)
தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி (130.10)
உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று (109-10)
உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது (121-1)
மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும் (126-3)
நிறையுடையேன் என்பேன்மன் யானோவென்
மறையிறந்து மன்று படும் (126-4)
எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து (129-5)
காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் தவறல் லவை (129-6)
தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் (I20-1)
வீழ்வார்க்கு-வீழ்வா ரளிக்கு மளி(120-2)
வீழுநர் வீழப் படுவார்க்கு (120.3)
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள் (124.4)
கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள் (124-5)
உறுவதொன் றுண்டு (128-1)
திகழ்வதொன் றுண்டு (128-3)
உள்ளதொன் றுண்டு, (128-4)
தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ (116-9)
நீங்கிற் றெறூவும் குறுகுங்காற் றண்ணென்னும்
தீயாண்டு பெற்றா ளிவள் (111-4)
இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர் (104-9)
உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகுந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர் (104-10)

நாலடியுள் காணப்படும் ஆடூஉ முன்னிலைகள் (ஆடவரை அழைத்தல்) மலிகடற்றண் சேர்ப்ப (73) பொருகடற்றண் சேர்ப்ப (97) மலிகடற்றண் சேர்ப்ப (98) அலைகடற்றண்சேர்ப்ப (107) நீள்கடற்றண் சேர்ப்ப (108) கனைகடற்றண் சேர்ப்ப (138) நளிகடற்றண் சேர்ப்ப (166) நளிகடற்றண் சேர்ப்ப (242) எறிகடற்றண் சேர்ப்ப (245) படுகடற்றண் சேர்ப்ப (246) ஒலிகடற்றண் சேர்ப்ப (249) தனைகடற்றண் சேர்ப்ப (349) ——தண் சேர்ப்ப (146) தண் சேர்ப்ப (194) தண் சேர்ப்ப (391) தண் சேர்ப்ப (227)——வீங்கு நீர்ச் சேர்ப்ப (117) இருங்கழிச் சேர்ப்ப (168) கரை யலைக்குஞ் சேர்ப்ப (224) கடற் சேர்ப்ப (336.)

ஈர்ங்குன்ற நாட (113) பூங்குன்ற நாட (128) நெடுங்குன்ற நாட (319) குளிர்வரை நன்னாட (71) உயர்வரை நன்னாட (77) அணிமலை நன்னாட (161) புனல்வரை நன்னாட (231) கணமலை நன்னாட (285) தண்குன்ற நன்னாட (290) பிறங்கருவி நன்னாட (343) இலங்கருவி நன்னாட (344) விறன்மலை நன்னாட (348) கணமலை நன்னாட (353) விறன்மலை நன்னாட (369)—கானக நாட (76) கானக நாட (283) மலைநாட (10) மலைநாட (203) மலைநாட (234) மலைநாட (237) ஓங்கருவி நாட (79) கறங்கருவி நாட (228) வாலருவி நாட (232) பாயருவி நாட (307) நல்வரை நாட (154) நல்வரை நாட (239) பெருவரை நாட (186) உயர்வரை நாட (223)—மைதவழ் வெற்ப (142) நீள்வரை வெற்ப (226)—பாண (388) பாண (390.)

மாதரை முன்னிலைகள் (மாதரை யழைத்தல்)

நிரை தொடீஇ (111) சுடர்த் தொடீஇ (398)—தடங்கண்ணாய் (116) வேனெடுங் கண்ணாய் (265) வேற்கண்ணாய் (267) வேனெடுங் கண்ணாய் (297) வாட்கண்ணாய் (358)—பாவாய் (266) எயிற்றாய் (287) கதுப்பினாய் (294) முலையாய் (400.)

இங்ஙனம் முன்னிலைகளுள் பல ஒற்றுமை உடையனவாக இருத்தலின் இப்புத்தக ஆசிரியன் ஒருவனே என்பது பெறப்படும்.

கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு (91)

[கொடுத்தலோடு கூடிய நற்குணமுள்ள மாந்தர்க்கு அவ்வுலகத்துக் கதவுகள் மூடப்பட்டிரா.]

தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்காட்
கடைக்குமா மாண்டைக் கதவு (271)

[தமது வீட்டில் ஒருவரும் நுழையாதபடி வாயிற் கதவுகளை மூடித் தாம் உள்ளே யிருந்து புசித்தொழுகும் மாந்தர்க் கவ்வுலகத்தின் கதவுகள் மூடப்பட்டிருக்கும்]

இவ்விரு பாக்களும் ஆசிரியன் ஒருவனாக இல்லா விட்டால் கொடுப்பவனுக்கு அண்டைக் கதவுகள் அடைத்திரா தென்றும் கொடாதவனுக்கு அக்கதவுகள் அடைத்திருக்கு மென்றும் கூறுதல் ஒருவாற்றாலும் இயலாது.

எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும் (347)

[நிரம்பிய செல்வ முடையவராயினும் கீழ்மக்களை அவர்கள் செய்யுந் தொழிலால் அறியக்கூடும்.]

எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும் (350)
இடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை (388)

[யாம் ஊரற்குத் துடியின் இடப்பக்கத்தைப் போலப் பயன்படாதிருக்கிறோம் (அதனால் ஏ பாண, நீ இவ்விடம் விட்டு உடுக்கையின்) வலப்பக்கத்தைப் போலப் பயன்படும் பரத்தையர்க்கு உரைப்பாய்]

கடைக்கண் ணனையநா மூரற் கதனா
லிடைக்கண் ணனையார்க் குரை (390)

[நாங்கள் தலைவனுக்குக் கரும்பினது கடைசியிலுள்ள கணுக்களை யொத்திருக்கின்றோம் (அதனால் பாணனே, இம்மொழியைக் கரும்பினது) இடையிலுள்ள கணுக்களை யொத்த பரத்தையர்க்கு உரைப்பாய்]

விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில் (103)

[விளங்காயைத் திரண்ட உருவினதாகச் செய்து வைத்தவர் ஒருவரும் இல்லை. அதுபோல் களாப் பழத்தைக் கரிய நிறத்தினதாகச் செய்து வைத்தவரும் இல்லை.]

—மாரி

வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில் (104)

[மழை பெய்யாதாயின் அதனைத் தருவிக்கவல்லவருமில்லை. அம்மழை மிகுதியாகப் பெய்யுமிடத்து (அதனைக்) குறையச் செய்வாரும் இல்லை]

இவ்விரு பாக்களும் பழவினையின் அன்றி மக்களால் செயற்பாலன ஒன்றுமில்லை என்பதை வலியுறுத்துகின்றன.

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே காவா தறஞ்செய்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு. (19)

[பெருங்காற்றால் பழங்களன்றிக் காய்களும் உதிர்தலுண்டு. ஆகையால் இப்பொழுது யாம் இளம் பிராயமுடையோம் முதுமையிற் தருமத்தைச் செய்வோம் என்று நினையாது உயிருள்ள போழ்தே ஒளியாமல் தருமத்தைச் செய்யுங்கள்.]

பெருங்கட லாடிய சென்றா ரொருங்குட
னோசை யவிந்தபி னாடுது மென்றற்றா
லிற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு (332)

[வீட்டிற்குச் செய்யவேண்டிய காரியங்களைக் குறைவற முடித்தபின்பு அறவினை செய்வோம் என்றிருப்போர் தன்மை, பெருங் கடலிலே நீராடுதற்குப் போனவர் அதன் ஓசை ஒருங்கே அடங்கின பின்பு மூழ்குவோமென்று காத்திருந்தாற் போலும்]

இவ்விரு செய்யுள்களும் அறம் செய்தலை வலியுறுத்துகின்றன.

யாக்கைகூய யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க. (28)

[உடலைப் பலமுடைத்தாகப் பெற்றவர் தாம்பெற்ற அவ்வுடலால் அடையக்கூடிய பெரும் பிரயோசனத்தை அடையக்கடவர்.]

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும் பயனு மாற்றவே கொள்க (34)

[பெறுதற்கரிய யாக்கையைப் பெற்ற பயனின் பெரிய பயனான தருமத்தை மிகுதியாகவே கொள்ளக்கடவர்.]

உறற்பால நீக்கல் உறுவர்க்கு மாகா (104)
உறற்பால—தீண்டா விடுத லரிது (109)
உறற்பால யார்க்கு முறும் (117)

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு (138)

[ஒலிகடல் தண்துறைப் பாண்டியனே, கற்றோர் நட்பு, கரும்பை நுனியிலிருந்து அடிவரை தின்ற தன்மைத்து, மற்றோர் கேண்மை அக்கரும்பை அடியிலிருந்து நுனிவரை தின்றாற் போன்ற தன்மையை உடையது.]

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுர மிலாளர் தொடர்பு (211)

[நூல்களின் உட்பொருள்களை நன்கறிந்தோர் சினேகம் எப்பொழுதும் நுனியிலிருந்து கரும்பை அடிவரையில் தின்றாற்போலும்; கல்வி யறிவாகிய இனியதன்மை இல்லாதவர்களது நட்பு அக்கரும்பை அடியிலிருந்து நுனிவரையில் தின்றாற் போன்ற தன்மையை உடைத்து]

குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவேனே—நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
வறைகடல்சூழ் வைய நக (230)

[ஒருவன் குற்றத்தையும் குணத்தையும் சினேகித்த பின்பு ஆராய்ந்து திரிவேனாலை, கடல்சூழ்ந்த உலகத்தார் யாவரும் என்னை இகழ்ந்து சிரிக்கும்படி நட்பினன் இரகசியத்தைக் காவாது விட்டவன் செல்லும் நரகத்திற்கு யான் செல்வேனாக.]

முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனே—நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக. (238)

[எனது சிநேகிதன் ஒருவனுக்கு ஆபத்து வந்தபோது விரைந்து எனது அருமையான உயிரை அவன் வசத்திற் கொடாமற் போவேனானால் நெடுமொழி யுலகம் நகைக்க யான், நட்பினன் மனைவியின் கற்பழித்தவன் போகும் நரகத்திற்குப் போகக் கடவேன்.]

இவ்விரு செய்யுள்களின் நடை தொடைப் போக்குகளை நோக்குக.

புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சம் தோன்றாமற்—காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல். (83)

[பிறன் மனையாளிடத்துப் போகும்போழ்து பயம், மீண்டு வரும்போழ்தும் பயம், அனுபவிக்கும் போழ்தும் பயம், அதனைப் பிறர் அறியாமற் காக்கும்போழ்தும் பயம். இவ்வாறு எந்நாளும் பயத்தையே தருகின்றதாதலின் ஒருவன் அஞ்சாதவனாய் பிறன் மனையாளிடம் செல்லுதல் என்]

கல்லாமை யச்சம் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்ச—மெல்லா
மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணைக் குடிப்பிறந் தார் (145)

[தாம் படியாமைக்கு அஞ்சுதலும், கயவர் செய்யும் இழி தொழில்களைச் செய்தற்கு அஞ்சுதலும், சொற்சோர்வு எந்த விடத்தில் உண்டாகிவிடுமோ என்று அஞ்சுதலும், யாசிப்பவர்க்கு யாதொன்றும் கொடுக்கக் கூடாமற் போனால் அதற்கு அஞ்சுதலும், இத்தன்மையான பல பயங்கள் உயர்குடிப் பிறந்தார்க்குள்ளன; ஆதலால் மாட்சிமைப்படாத இவ்வுயர்குடியிற் பிறந்தோர் மரக்கலத்துள்ளோர் போல் எப்பொழுதும் அச்சமுடையார்.]

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வ தறிதிரேற்—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று (106)

பலநூற்களையும் கற்றமைந்த கல்வியால் வரும்பயனை உணர்வார் இறக்கவும், கல்லாதார் உயிர்வாழ்வதும் ஆலோசித்தறிவீராகில், கல்லாதார்மாட்டு அறிவென்னும் இனிமை (சேறு) மனத்தில் இல்லாமையால் கூற்றானது அவரைச் சக்கை யென்றெண்ணிக் கொள்ளமாட்டாது]

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல்சிறப்பி
னாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து (252)

[பலநூற்களையும் கற்றமைந்த கல்வியால் வரும் பயனை உணர்வார் தம்பெருமை கெட்டுத் துன்பத்தால் வருந்துவதன் காரணத்தை அறிய விரும்புவீராயின், பழமையான சிறப்பையுடைய கலைமகள் அவர்களிடம் இருத்தலால் லட்சுமி கோபங்கொண்டு (அவர்களிடம்) சேரமாட்டாள்]

இவ்விரு கவிகளிலும் வரும் தொடர்களை நன்கு நோக்குக. (தொடரும்)

வர்த்தமானம்

ரிசர்வ் பாங்க் பில் :—டில்லி சட்டசபை இந்த மாதம் 1-ந் தேதி கூடியது. அதில் ஸர்பேசில் ப்ளாக்கெட் ரிசர்வ் பாங்க் பில்லை முதல் முதல் முன் கொண்டுவந்து அதைச் சபை நிர்வகிக்கவேண்டுமென்று சொன்னார். சபைத் தலைவரான பட்டேல் இதற்குமுன் கொண்டுவரப்பட்ட ரிசர்வ் பாங்க்பில் இன்னும் சபைமுன் இருக்கிறது. அது இருக்கிறவரையில் வேறு பில் கொண்டுவருவது முறையீனம் என்று தீர்மானித்து மறுத்துவிட்டார். இனிமேல் என்ன செய்வார்கள் என்பது தெரியவில்லை. பழைய பில்லையே நடத்துவார்கள்என்றும் பேச்சு இருக்கிறது.

***

ராஜப்பிரதிநிதியின் உபன்னியாஸம் :— சென்ற 2-ந் தேதியன்று ராஜப்பிரதிநிதி டில்லியில் உள்ள இரண்டு சட்டசபைகளின் பொதுக் கூட்டத்தில் முக்கியமாய்ச் சைமன் கமிஷனைப் பற்றிப் பேசினார். அவர் சொன்னதின் தாற்பரியம், இந்திய இராச்சியமுறைச் சீர்திருத்தத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷன் நாளைக்கு இவ்விடம் வந்திறங்க விருக்கிறது. அவர்கள் இப்போ வருவது தேசத்தில் உள்ள வெவ்வேறு சட்டசபைகளும் அரசாங்க முறைகளும் எவ்விதம் நடக்கின்றன, என்பதை நேரில் பார்த்து அதன்மேல் எவ்விதம் தாங்கள் செய்யத் தொடங்கும் காரியத்தை நடத்தவேண்டும் என்பதைத் தீர்மானிக்கவே. ஆனால் இந்தியாவில் இந்தக் கமிஷனைப்பற்றி அபிப்பிராயம் வேறு பட்டிருக்கிறது. அநேகர் இந்தக் கமிஷன் வேண்டியதுதான் என்றும் அது சரிவர நிறைவேறுவதற்கு வேண்டிய உதவிகள் நாங்கள் செய்யத் தயாராய் இருக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். வேறு சில முக்கியமான வகுப்பினர் இதைப்பற்றி முற்றும் கண்டித்துப் பேசி வருகிறார்கள். இவர்கள் சொல்வதில் இரண்டு தப்பு இருக்கிறது. ஒன்று இந்தியர்கள் இந்தக் கமிஷன்முன் தங்கள் விருப்பத்தையும் எண்ணத்தையும் தெரிவித்து அதன்படி கமிஷனில் தீர்ப்புச் செய்யதுவைக்க முடியாதென்பது. மற்றது இந்தக் கமிஷனில் இந்தியர்கள் ஒருவரையும் சேர்க்காததினால் பிரித்தானிய பார்லிமெண்டு இந்தியாவுக்கு அவமரியாதை செய்தது என்பது. இந்தக் கமிஷன் விசாரணை செய்துகொண்டு போகும் ஒவ்வொருபடியிலும் இந்தியத் தலைவர்களோடும் சட்டசபை அங்கத்தவர்களோடும் சேர்ந்துதான் விசாரணை செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது. முடிவில் இந்தக் கம்மிஷன் செய்த முடிவை இந்திய சட்டசபையிலிருந்து ஏற்படுத்தப்படும் தெரிவுக்கம்மிட்டியும் பார்லிமெண்டு தெரிவுக் கம்மிட்டியும் சேர்ந்து ஆராய்ந்து பின்புதான் அது சட்டமாகும். இவ்விதம் இருக்க இந்தியர்கள் ஒருவகையிலும் தம்வசப்படுத்த எதுவில்லை என்று சொல்வது கருவி சரியாய் இல்லை என்று சாக்குச் சொல்லும் வேலையாளை ஒத்தது. மேலும் இந்தியாவை அவமரியாதை செய்தார்கள் பிரித்தானிய அரசாங்கத்தார் என்று சொல்வது சுத்தத்தப்பு. இந்தியருடைய எண்ணத்தையும் சரியானபடி தெரியாமல் மதியீனமான வேலை செய்தார்கள் என்று சொல்லலாம்.

அதைவிட்டு அவமரியாதை செய்தார்கள் என்று சொல்வதற்கு இடமே இல்லே.

இவைகளைத் தீரயோசியாமல் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று சொல்வது கடைசியில் இந்தியாவுக்குத் தீங்காய் விளையும். எவ்விதமும் கமிஷன் தங்கள் விசாரணையை நடத்திப் பார்லிமெண்டுக்கு விசாரணையின் முடிவையும் தெரிவிக்கும். ஆனல் எல்லாரும் சேர்ந்து விரோதமில்லாமல் கமிஷனே நடத்தாது விட்டால் இந்தியாவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையே இருக்க வேண்டிய நல்ல எண்ணமும் சிநேகமும் கெடும். இவைகளை அவர் இந்தியாவுக்கு ஒரு சிநேகிதராகத் தன்னைப் பாவித்துச் சொன்னவைகளாம். ஒரு சிநேகிதன் சொல்வது எல்லா வேளேயும் நம் விருப்பத்துக்கு ஏற்றவையாய் இராவிட்டாலும் இந்தத் தருணத்தில் இந்தியாவின் நன்மையை விரும்பியேதான் இதைச் சொல்ல வேண்டியது என்று ராஜப்பிரதிநிதி சொல்லிமுடித்தார்.

***

ஹார்த்தால் குழப்பம்:— சென்னையில் ஹார்த்தால் நாளாகிய வெள்ளிக்கிழமை சில விடங்களில் சிறுவர்களும் சில காலிகளும் கூடி. சிற்சில விடங்களில் சண்டையும் சச்சரவும் செய்தார்கள். ஐக்கோர்ட்டின் முன் பெரிய கும்பல்சேர்ந்து கல்லெறிந்ததினுல் போலீசார் துப்பாக்கியால் சுடவேண்டி நேர்ந்தது. வெடிபட்டு ஒருவன் இறந்துபோய்விட்டான். வேறு இடங்களில் கல்லெறியும் சண்டையும் நடந்தது. இந்தியாவில் முக்கியமான இடங்களில் எல்லாம் ஹார்தால் நடந்ததாகத் தெரிகிறது. சிலவிடங்களில் போலீசார் அனேகரைக் கைது செய்திருக்கிருர்கள். கல்கத்தாவில் 220 பேர் கைது செய்யப்பட்டார்கள். முகமதியச் சிறுவர் பலர் பிராமணர்களையும், கதர் உடுத்தியவர்களையும் தாக்கி ஹிம்சை செய்தனர்.

***

சைமன் கமிஷன் பகிஷ்காரம்:- பகிஷ்காரக் கமிட்டியார் சைமன்கமிஷன் சென்னைக்கு வரும் தினத்தில் முற்றும் பலாத்காரம் இல்லாமல் ஹார்த்தால் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் அன்று ஒருவரும் வெளியில் வாாமல் அவரவர் வீட்டிலேயே இருக்கவேண்டுமென்றும், ஹார்த்தால் அனுஷ்டிக்க இஷ்டமில்லாதவர் ஒருவரையும் நிர்ப்பந்தம் செய்யப்படாதென்றும் கேட்டுக்கொள்ளுகிருர்கள்.

***

பண்டிதர் நேரு:—இங்கிலாந்து ஐரோப்பா கண்டம் எகிப்து ஆகியவிடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுப் பண்டிதர் மோதிலால் இருதினங்களுக்குமுன் இந்தியா திரும்பினர்.

இந்தியாவைப்பற்றி இவர் சென்ற இடங்களிலுள்ளவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும், அந்தத் தேசங்களில் இந்திய விஷயங்களைப் பற்றி விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் சைன, எகிப்து, முராக்கோ, மெஸபடேமியா ஆகிய இடங்களுக்கு இவ்விடம் இருந்து இடையிடையே பிரசாரகர்களை அனுப்பவேண்டும் என்றும் ஒரு நிருபரிடம் கூறினர்.

***

விவசாயமும் தேசமும்:—இவ் விஷயத்தைப்பற்றிச் சென்றவாரம் K.C. ராமகிருஷ்ணன் என்பவர் சென்னை சர்வகலாசாலையின் ஏற்பாட்டின் கீழ் செனெட்ஹாலில் ஒரு உபன்னியாஸம் செய்தார். அவர் முக்கியமாய் எடுத்துக்காட்டிய விஷயங்களாவன:-மேனுட்டில் கைத்தொழில் அபிவிருத்தி யடைந்திருக்கிற நாடுகளில் விவசாய முன்னேற்றம் செய்யவேண்டும் என்கிற கிளர்ச்சி அந்தத் தேசங்களில் தானியக் குறைவு ஏற்பட்டதனுல் மாத்திரம் உண்டானதன்று. விவசாயத் தொழில் சீர்கெட்டுப் போனதினுல் தேசத்துச் சனங்களுடைய சுகநிலேயும் ஒழுக்கங்களும் குறைவற்றுப்போய் வருவதே முக்கியகாரணம் என்று சொல்லலாம்.

எவ்விதங்களில் அரசாங்க உதவி விவசாய முன்னேற்றத்திற்குக் கொடுக்கலாமென்பதைப்பற்றிச் சொல்லுகையில் அரசாங்கத்தார் அதிகமாக நிலங்களைவாங்கி அதில் சனங்களைக் குடியேற்றி அந்நிலங்களைச் சிறு துண்டங்களாக்கி ஒவ்வொருவருக்கும் கொடுப்பதே ஏற்றவழி என்று அனேகர் எண்ணுகின்றனர். நிலங்களில் வேலைசெய்யும் வேலைக்காரருக்கும் அவர்களுடைய கூலி இவ்வளவு என்றும் அவர்களுக்குத் தகுந்த வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் சட்டம் ஏற்படுத்துவதும் முக்கியமாகும்.

ஆனல் இந்தியாவின் நிலமை விவசாயா விஷயத்தில் மேனுட்டுத் தேசங்களை ஒத்திருக்கவில்லை. இங்கே முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம் நிலம். சனங்கள் படும் கஷ்டத்திற்கு ஏற்ற விளைவு ஏற்படச் செய்வதே. இதற்கு விவசாய முறைகள் சீர்சிருத்தப்பட வேண்டும். அரசாங்கத்தார் செய்யக் கூடிய முதல் உதவி நீர்வளம் ஏற்படுத்துவதும், இதைத்தவிர மேகமழை வருஷத்தைப்பற்றிச் சரியான ஆராய்ச்சிசெய்து இவ்வற்றின் நிலேயை முன்னுகவே கிருஷிகர்களுக்கு அறிவிப்பதுமாகும்.

***

சாரணச் சிறுவன் செயல்:—சென்ற திங்கட்கிழமை திருநெல்வேலியில் குறுக்குத்துறையில் ஆற்றைக்கடந்து சென்ற ஐந்து பெண்கள் எட்டாததுறையில் இறங்கி முழுகிபோகிற தறுவாயில் ஞானசிகாமணி சோவா வென்னும் சாரணர் அவர்கள் எல்லாரையும் காப்பாற்றினர்.

***

சைமன் கமிஷனும் இந்தியச் சட்டசபையும்:— இந்தியச் சட்டசபை அங்கத்தினர்கள் தங்கியிருக்கும் வெஸ்டர்ன் ஹோட்டலில் சைமன் கமிஷன் அங்கத்தினர்களுக்கு விடுதியளித்தது ஒட்டி மௌல்வி முகம்மது யாகூப் (இந்தியச் சட்டசபை உபதலைவர்) கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்கப்போவதாக அறிவித்திருக்கிறர்:—

வெஸ்டர்ன் ஹோட்டலில் கமிஷன் அங்கத்தினர்களுக்கு விடுதியமைத்துக் கொடுத்ததன் காரணமென்ன? இந்தியச் சட்டசபை ராஜாங்கசபை ஆகியவைகளின் அங்கத்தினர்கள் தங்குவதற்கெனவே முக்கியமாக இந்த விடுதி ஏற்பட்டது உண்மையல்லவா? இந்தக் விடுதி மேற்பார்வை யாரிடமிருக்கிறது? கமிஷன் அங்கத்தினர்களுக்கு இதில் இடம்கொடுக்க எப்போது முடிவு செய்யப்பட்டது? சட்டசபைத் தலைவரை இது விஷயமாகக் கலந்து ஆலோசித்தார்களா? வழக்கமாக இங்கு தங்கும் அங்கத்தினர்களைக் கலந்ததுண்டா? அங்கத்தினர்களுக்கு இடவசதி செய்துகொடுக்கும் விஷயத்தைக் கவனிக்கச் சென்ற வருஷம் சபையில் தெரிந்தெடுக்கப்பட்ட கமிட்டியாருக்கு இவ்விஷயம் அறிவிக்கப்பட்டதா? கமிஷன் அங்கத்தினர்களிடமிருந்து அறைகளுக்கு வாடகை வாங்கப்படுமா? அப்படியானல் எந்த விகிதப்படி வாங்கப்படும்? கமிஷன் அங்கத்தினர்களுக்கென எத்தனை அறைகள் விடப்பட்டிருக்கின்றன? கமிட்டிக் கூட்டம் கூடுவதற்கென ஏற்பட்ட அறையைக் கமிஷன்யோசனை மண்டபமாகச் செய்ததேன்? கட்சிக் கூட்டங்கள் நடைபெற வேறுஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

(6) ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்.

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு
தகுந்த தமிழ் வித்துவான்களால் பார்வையிடப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

இப்பதிப்பின் விசேஷம்

தமிழிற் கம்பர் முதலிய மகாகவிகள் இராமாயணத்தை இயற்றி யிருந்தபோதிலும், செய்யுள் நடையை அறிந்து படித்து ஆனந்திக்கிறவர்கள் வெகு கொஞ்சமாயிருக்கிறபடியால் ஸ்திரீகளும், சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ் வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது.

இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் நன்முய்ப் பரிசோதித்து, வெகுபொருள் செலவிட்டு, சிரத்தையுடன் மிகச்சிறப்பாய் அச்சிட்டு அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

பாலகாண்டம்	244 பக்கம்		6 காண்டம்
அயோத்திபாகாண்டம்	501	,,	
ஆரணியகாண்டம்	254	,,	
கிஷ்கிந்தாகாண்டம்	226	,,	ரூ 15
சுந்தரகாண்டம்	260	,,	
யுத்தகாண்டம்	702	,,	
சுந்தரகாண்டம் தனியே			ரூ. 2 4 0

கே. மஹாதேவன், புஸ்தக வியாபாரம்,
1, ராமசாமிபிள்ளை தெரு, வேப்பேரி, சென்னை

ஏமாங்கதத்து

இளவரசன்

PRINCE OF YEMANGADA

T. N. சேஷாசலம் B.A.B.L., இயற்றியது.

அன்பனின் உயிர்காக்க ஆணுடை தரித்துத் தேர் நடத்திய வீரமகள் பஞ்சரவல்லி செய்த சாகசங்களும், அறிவிலாப் புன்கவி ஒருவன் படுத்தியபாடும், வாய்மைநெறி ஒரு புறமும் தன்மகன்மேலிருந்த வாஞ்சனை மறு புறமும் பிடித்திழுக்கத் திகைப்புற்ற வேந்தன் செய்த சில செயல்களும், ஆசைபுகுந்து அறிவழிக்க ஒரு சேனைத்தலைவன் சிந்தித்த சூழ்ச்சிகளும், கற்பிற்கரசியாய அசோகவதி தன் கணவனின் பிழைகளைப் பாராட்ட நினையாத வண்ணமும், சுவை பல கலந்து அழகோடமைந்த தமிழ் நடையினில் வரைந்துள்ள இக்கதை நூல் யாவரும் பன்முறை படித்து இன்புறுதற்கு இயன்றது. பள்ளிகளில் பாடமாக வைப்பதற்குமேற்றது.

விலை ரூ. 1 0 0

வேண்டுவோர்:—

பி. ஜி. பால் & கம்பெனி,
பப்ளிஷர்ஸ்,
2, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு,
ஜார்ஜடவுன், மதராஸ்.

யுனைடட் இந்தியா லைப் அஷ்யுரன்ஸ்

(2) **கம்பனி, லிமிடெட்.**

ஹெட் ஆபீஸ் : சென்னை] [1906-ஹுலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

பாலிஸிஹோல்டர்களுடைய ட்ரஸ்ட்

பண்ட் சுமார் ரூபா 25 லக்ஷம்.

188989

சேர்மன்:—Sir. M. Ct. முத்தய்ய செட்டியார்.

நிர்ப்பயமானது, பேருதவிசெய்வது:—வட்டிக்கு விட்டிருக்கும் தொகையாவும் பத்திரமாயிருப்பதும், பாலிஸிஹோல்டர்களுக்கு வேண்டிய உதவி அன்போடு ஒழுங்காகச்செய்து தருவதும் இந்த யுனைடட் இந்தியா கம்பனிக்கு உள்ள சில முக்கிய அங்கங்கள்.

யுனைடட் இந்தியா கம்பனி சென்னையில் இருப்பது. ஆனல் அதன் கீர்த்தி இந்தியா முழுவதும் பரவியுள்ளது. உயிர் அஷ்யுரன்ஸ் கம்பனிகளில் இந்த யுனைடட் இந்தியா கம்பனியானது, "மிகுந்த பலமானதென்றும் பழுதற்றதென்றும் ஒழுங்காயும் மட்டுதிட்டக் கவனத்தோடும் நடத்தப்படுவது" என்றும், இந்த விஷயங்களைச் சீர்தூக்கி அறியவல்ல பேரறிஞர் வேறுமாகாணத்தைச் சேர்ந்தவர் கருதுகின்ருர்.

காலதாமதம் செய்யாமல் சேரவேண்டியதை அவரவர்களுக்குச் செலுத்திவிடுவது: காரியங்களை மிக்ககவனத்தோடு நிர்வாகம் செய்வது. தாராளமாயும் நியாயமாயும் ஏற்படுத்தியிருக்கின்ற பாலிஸி நிபந்தனைகள்: மிதமான பிரீமிய கட்டணம்: தகுந்த போனஸ்: இவைகளும் இவைபோன்ற வசீகரமான மற்ற குணங்களும் யுனைடட் இந்தியா கம்பனியை ஒருவிதத்திலும் குறைவில்லை என்று ஜனங்கள் கொண்டாடத் தக்க ஒரு உயிர் அஷ்யுரன்ஸ் கம்பெனியாகச் செய்து வைத்து இருக்கின்றன.

முக்கியமாக தென் இந்திய ஜனங்களுக்கு உபயோகம் ஆகும்பொருட்டு ஏற்படுத்தியிருப்பது தென்னிந்தியா முழுவதிலும் இந்த யுனைடட் இந்தியா கம்பனி ஒன்றுதான் என்று சொல்லலாம். மிக்க ஒழுங்காகவும் அனுதாபத்தோடும் இங்கே தன் வேலையைச் செய்து வரவேண்டுமென்று இந்தக் கம்பனி எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருக்கின்றது.

இதைப்பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்க்குக் கேட்டவுடனே யாவும் தெரியப்படுத்துவோம்.

தபால் பெட்டி 281,
10, மக்லீன் தெரு, சென்னை.

ஸ்டார் அண்டு கம்பனி
மானேஜர்கள்.

(1). **இண்டஸ்டிரியல் & புருடன்ஷியல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

[1913 ஸ்தாபனம்] தலைமை ஆபீஸ் : பம்பாய்.

நன்கு மதிக்கப்பெற்று விருத்தியடையும்

இந்திய லைப் ஆபீஸ்.

போர்டு ஆப் டைரக்டர்கள்.

Sir. லல்லுபாய் ஸமால்தாஸ் K. T. C. I. E. (சேர்மன்)

Sir. சிமன்லால் H. ஸெதால் வாட் K. C. I. E.

Sir. ஹுகும் சந்து ஸரூப் சந்து K. T.

வேல்ஜி லக்ஷிமி B. A. L. L. B.

மோடிலால் C. ஸேதால்வொட், அட்வகேட் பம்பாய்.

லால்ஜி நாராயண்ஜி J. B. மில் சொந்தக்காரர்.

கம்பெனியின் முதல் இரண்டு சேர்மன்களும், காலஞ்சென்ற ஸர். பிரோஸிஷா எம். மேத்தா M. A. L. L. D. K. C. I. E. யும் காலஞ்சென்ற ஸபூர்ஜி புரோச்சா K. T.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2,21592.

வசூலிக்கப்படாத மூலதனம் ரூ. 16,25000.

1. பறி முதல் செய்யப்படாத இயற்கையாகவுள்ள உரிமைகள்
2. பாலிஸிஹோல்டர்களே நேரில் கண்காணிப்பதற்காக அவர்களுக்கு இரண்டு டைரக்டர்கள் தேர்ந்தெடுக்க உரிமை.
3. குறைந்த அளவு செலவு.
4. பாத்யதைகளை உடனுக்குடன் பைசல் செய்வது.

நல்ல கமிஷனில் வேலை செய்ய, எல்லா விடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்:—

நாராயிண் தாஸ் கிர்தர் தாஸ்,
உள்ளூர் மானேஜர்,
நெ. 10 மக்ளீன் தெரு, மதராஸ்.

Dr. Orison Swett Marden's World·Famous Inspirational Books

(3) TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Edited and Published by Mr. E. Kumariah, B.A., B.L.